பக்கங்கள் 8 விலை சதம் 40 ★★

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 19 வைகாசி 7 ஜ: ,ஆகிர்: 1 இதழ்: 98
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 20-5-77

## துரையப்பா கொலை: 6-வது சந்தேகநபர் விவகாரம்: இன்றுதீர்ப்பு

( கொழும்பு, )

துரையப்பா கொலைச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு இதுவரை குற்றம் சுமத்தப்படாத 6வது சந்தேக நபரான கனகரத்தினம் விஸ்வசோதிரத்தினம் அல்லது இன் என்பவரை றிமாண்டில்வைத்திருக்க அதிகாரப் கிடையாது, ஆகவே அவரை விடுதலைசெய்யுங்கள்''

இவ்வாறு நேற்று கொழும்பு மாஜிஸ்ரேட் முன்னிலையில் இன்பத்தை விடுதலை செய்யும்படி கோரி விடுக்கப்பட்ட மனு மீதான விசாரணையில் சட்டத்தரணி திரு. மகேந்திரராஜா கேட்டுக் கொண்டார்.

கொலையும், கொள்ளையும் பிணையில் விடுதலை செய்ய முடியாத குற்றங்கள். ஆகவே 7வது சந்தேகநபரான இன்பத்தின் மீது கொள்ளைக் குற்றச்சாட்டு இருப்பதால் அவரை பிணையில் விடுதலைசெய்ய முடியாது என்று அரசு தரப்பு சட்டத்தரணி தெரிவித்தார்.

கொள்ளைக்குற்றம் சாட்டப்பட இருப்பதால் கொள்ளை நடந்ததாகக் கூறப்படும் யாழ்ப்பாணத்தில் ஏன் 6-வது சந்தேக நபரை ஆஜர் செய்யவில்லையென மாஜிஸ்டிரேட் திரு. ரணராஜா கேட்டார்.

அதற்குப் பதிலளிக்கையில் இம்மாதம் 26ந் திகதிக்கு

(8-ம் பக்கம் பார்க்க)

# 6-ல் வேட்புமனுதாக்கல்

# பிரசாரம் சுறுசுறுப்பு!

## தேர்தல்முடிந்து ஒருமாதத்தின் பின்னரே பேரவைகூடும்

கொழும்பு, வியாழன்

தேசிய அரசுப் பேரவை கலைக்கப்பட்டு, பொதுத்தேர்தல்பற்றிய ஜனதிபதியின் பிரகடனம் வெளியானதைத் தொடர்ந்து நத்தைவேகத்தில் சென்று கொண்டிருந்த தேர்தல் பிரசாரம் 'சூடு' பிடித்துவிட்டது. புதிய கட்சி அமைப்பாளர்களும், புதிய சுயேச்சை முகங்களும்வரிந்து கட்டிக் கொண்டு பிரசாரத்தில் இறங்கிவிட்டன.

### தேர்தல் திகதி

இலங்கைக் குடியரசின் முதலாவது தேசியஅரசுப்பேரவை, கடந்த புதன்கிழமை நள்ளிரவு கலைக்கப்பட்டது ஜனதிபதி வெளியிட்ட பிரகடனத்தின் படி பொதுத்தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யும் தினம் அடுத்த ஜூன் மாதம் ஆறும் திகதியாகும். பொதுத்தேர்தல் ஜூலைமாதம் இருபத்தொராம் திகதி நடைபெறுமென்றும் ஆகஸ்ட்மாதம் இருபத்தாறும் திகதி தேசிய அரசுப்பேரவை கூடுமென்றும் ஜனதிபதி வெளியிட்ட பிரகடனத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல்பற்றி அறிவிக்கப்பட்டதும் அரசியல்கட்சிகளிடையே திடீர் விழிப்பு ஏற்பட்டது. கூடவே தேர்தல் பிரச்சாரமும் சூடிபிடித்தது.

நியமனப்பத்திரம் 6-ந்திகதி என்பதால் கட்சிகளுக்கும் 'அவசரநிலை' ஏற்பட்டுள்ளது.

### கட்சிகள் நிலைமை

இம்முறைத் தேர்தலில் சில புதிய திருப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஐக்கியதேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தவிர மற்றைய பிரபல கட்சிகள் கூட்டுச் சேர்ந்து போட்டியிடுகின்றன. முன்னர் தனித்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்தும் போட்டியிட்ட லங்கா சமசமாஜக்கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் புதிய 'மக்கள் ஜனநாயகக்கட்சி'யுடன் கூட்டுச் சேர்ந்து 'சோஷலிஸ ஐக்கிய முன்னணி'' என்ற பெயரில் 145 தொகுதிகளில் போட்டியிடுகிறது. இக்கட்சியும் ஸ்ரீ ல. சு. கட்சியும் கடைசி நேரத்தில் இணையலாம் என்று எதிர்பார்க்கப்பட்டபோதிலும் இணைப்புத்திட்டத்தை லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா முற்றும் முழுவதுமாக மறுத்துவிட்டார். அந்த யோசனைக்கே இடமில்லை என்று டாக்டர் என். எம். பெரேரா அறிவித்துள்ளார். லங்கா சமசமாஜக் கட்சி 1975-ம் ஆண்டு செப்

(7-ம் பக்கம் பார்க்க)

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, வியாழன்

ரம்புக்கனையில் நேற்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 615-வது தேசியசுவீப்பின் முதல் மூன்று முடிவுகள் வருமாறு;

முதலாவது பரிசு
45 W 0739
ரூபா 1,00,000

இரண்டாவது பரிசு
39 E 0020
ரூபா 40,000

மூன்றுவது பரிசு
49 V 0064
ரூபா 10,000

(மிகுதி நாளை வரும்)

## செல்வாவின் அஸ்தி நாளை நல்லடக்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

தந்தை செல்வாவின் புனித அஸ்தி நாளை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம்மாநகர சபைக்கு அண்மையில் உள்ள தந்தை செல்வா நினைவாலய சதுக்கத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

தந்தை செல்வா நினைவு அறங்காவல்குழுத்தலைவர் திரு, கு. நேசையா தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் கூட்டணித் தலைவர்களும் பொது மக்களும் கலந்து கொள்வர். (கெ-இ)

## 18 பேருக்கு றிமாண்டில்

கண்டி, வியாழன்

புசல்லாவ டெல்டா தோட்ட வடக்கு டிவிஷனில் நேற்று முன்தினம்நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களை அடுத்து கைது செய்யப்பட்ட

(8ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு மேற்கில் 'சுந்தரர்' போட்டியிடுவது உறுதியாம்

கொழும்பு,வியாழன்

ஈழத் தமிழர் தொண்டர் சபைத் தலைவர் திரு ஸி.சுந்தரலிங்கம் கொழும்பு மேற்குத் தொகுதியில் போட்டியிடுவது நிச்சயம் எனத் தெரியவருகிறது. அவர் உடல் நலத்துடன் இருப்பதாகவும் அவரது தேர்தல் பிரசாரக் கூட்டம் விரைவில் கொழும்பில் நடைபெறும் எனவும் அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன. (ம.உ)

## பொலிஸ் இரட்டைக் கொலை: இறுதி அஞ்சலியில் 500 பொலிஸார்

### எவரும் கைதாகவில்லை

யாழ்ப்பாணம், வெள்ளி

நேற்று முன்தினம் இணுவிலில் சுட்டுக்கொல்லப்பட்ட இரு பொலிஸ் கான்ஸ்டபிள்களின் இறுதி ஊர்வலம் இன்று நடைபெறும். இறுதி அஞ்சலியில் ஐநூறு பொலிசார்கலந்து கொள்வார்கள்.

காங்கேசன்துறை பொலிஸ் நிலைய துப்பறியும் பிரிவைச் சேர்ந்த சண்முகநாதனும் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய துப்பறியும் பிரிவைச் சேர்ந்த சண்முகநாதனும்

(7-ம் பக்கம் பார்க்க)

## ஈழம் வந்த ஜெர்மன் பேராசிரியரை காணவில்லை!

கொழும்பு, வியா.

மேற்கு ஜெர்மனைச்சேர்ந்த பேராசிரியர் ஒருவர் இலங்கையில் காணமல் போய் விட்டார்.

இவரது மர்ம மறைவு குறித்து சி. ஐ. டியினர் தீவிர விசாரணை நடத்திவருகின்றனர்.

ஒஸ்டா ரியூபோ என்றபிரஸ்தாப 76 வயது பேராசிரியர் இலங்கையில் தாவரவியல், விலங்குகள் என்பனபற்றிய ஆராய்ச்சி மேற்கொள்ளும் பொருட்டு இங்கு வந்திருந்தார்.

இவர் பொலநறுவ, திஸமகாரம, சிவனொளிபாதமலை, சிகிரியா முதலான பகுதிகளுக்குச் செல்லத் திட்டமிட்டிருந்தார் எனத் தெரியவந்துள்ளது. (உ)

## அருளம்பலத்தின் கொடும்பாவி எரிப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

முன்னள் யாழ். மாவட்ட அரசியல் அதிகாரியும் நல்லூர் எம். பி.யுமான திரு. ஸி. அருளம்பலத்தின் கொடும்பாவி நேற்று கொக்குவிலில் உள்ள மயானத்தில் எரிக்கப்பட்டது.

கொக்குவில் இளைஞர்களால் திரு. அருளம்பலத்தின் வீட்டிற்கு அண்மையில் பொற்பதி சந்தியிலிருந்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்ட கொடும்பாவி அவரது இல்லத்திற்கு முன்னல் சென்று கோண்டாவில் சந்தி, திருநெல்வேலி சந்தி ஊடாக கொக்குவில் கணக்கையர் மயானத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

(8-ம் பக்கம் பார்க்க)

## விலை குறைப்பு

எமது இறக்குமதி மோட்டார் உதிரிப்பாகங்களில் 10% விலை குறைத்துள்ளோம்.

ராமகிருஷ்ணாஸ்

ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம். 6221

## ஈட்டுவழக்கில் விற்பனவுக்கான அதிகாரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்
1. இராசமாணிக்கம் பெண் இராசம்மாவும்
2. தம்பிப்பிள்ளை இராசமாணிக்கம் இருவரும் ''இராசபவனம்'' கனகசபை வீதி, மானிப்பாய்.

இல. ஈடு/10411

வாதிகள்

எதிராக

1. முத்தையா பெண் மீனும்பாள், இவர் காலஞ்சென்ற தையல்நாயகம் அல்லது சு. ஆசைப்பிள்ளை கை. பெ. தையலம்மாவின் ஆதனங்களுக்கு சட்டப்பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவர். மானிப்பாய் தற்போது B 11 அரசாங்கக் கட்டிடம், டொறிங்டன் அவன்யூ, கொழும்பு.
2. சரவணமுத்து முத்தையா மேல்பார்த்த விலாசம் இறந்துவிட்டார்.

பிரதிவாதிகள்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் 10411ம் இலக்க ஈட்டுவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1977ம் ஆண்டு ஆனி மாதம் 8ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபா 2,440/- மேலும் ரூபா 1500/-க்கும் 1-11-69 தொடக்கம் 11-11-69 வரைக்கும் 100க்கு 8வீதவட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் 100க்கு 5வீத வட்டியும் வழக்குச்செலவு ரூபா 587-47 (இதில் நடைபெற்ற செலவு ரூபா 407/57 நடைபெற வேண்டிய செலவு ரூபா 98-90 மேலதிக சமயாசமயச்செலவு ரூபா 81-00) கொடுக்கவேண்டியிருப்பதாலும்.

### ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோயிற்பற்று மானிப்பாய் இறை மயிலப்பளையும் நொச்சியெல்லையும் மறுபிரிவுகளும் B 308/247ல் பதிவு செய்யப்பட்டது. நி. பர். 8¾ இதில் மறு பங்காளியாகிய கனகாம்பிகை தனது உறுதிப்படி சொரியலாய் நில. பர. 5 கிழக்குப் புறமாகவும் வடக்குப் புறமாகவும் ஆட்சிசெய்து வருவதால் எனது சொரியலான நில. பர. 3¾க்குப் பதிலாக மேற்குப்புறத்தில் தெற்குப்பக்கமாக நிற்மாக 3¾ இதில் கிழக்குப் பக்கமாக (நில. பர. ¾) இதற்கு எல்லை கிழக்கு செல்லத்துரை பெண் அற்புதத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு பொன்னம்பலம் தம்பிராசாவுக்கும் இராசரத்தினம் பெண் கனகாம்பிகைக்குரிய ஆதனம். மேற்கு கார்த்திகேசு தேவராசாவுக்கும் பெண் சிவமணிக்குமுரியஆதனம். தெற்குரோட்டு இதடங்கலும்.

க. சுப்பிரமணியம்,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்,

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத்தெரு, 89ம் நம்பர்.
27-4-77. 6228

## பட்டின சபை சங்கானை
# கேள்வி அறிவித்தல்

1977-ம் ஆண்டு யூன் மாதம் 20-ம் திகதி (20-6-77) காலை 10-00 மணிவரை சங்கானைப் பட்டினசபைத் தலைவரால் கீழ் வரும் வேலைகளுக்கான கேள்வி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்வி விண்ணப்பப்படிவங்கள் அதற்கான கட்டணத்தைச் செலுத்தி 1977-ம் ஆண்டு யூன் மாதம் 17-ந் திகதி பிற்பகல் 2-00 மணிவரை இக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனியான படிவத்தில் விண்ணப்பம் செய்தல்வேண்டும்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் யாவும் 'சீல்' வைக்கப்பட்ட உறையிலிட்டு 'தலைவர், பட்டினசபை, சங்கானை' என்ற முகவரிக்கு மேற்குறிப்பிட்ட திகதிக்குமுன் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்பட வேண்டும். நேரடியாக கொடுக்க விரும்புபவர்கள் காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் தங்கள் விண்ணப்பங்களைப் போடலாம். கேள்வி விண்ணப்பம் அடங்கிய உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் தெளிவாக எழுதப்படவேண்டும்.

குறிப்பிட்ட திகதிக்குப்பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விப்பத்திரப்பணம் திருப்பி மீளளிப்புச் செய்யப்படமாட்டாது.

மேலதிக விபரங்கள் அறிய விரும்பின் இக்காரியாலயத்தில் காரியாலய நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

| வேலைகள் | கேள்விப் பணம் | பத்திரப் பணம் |
|---|---|---|
| 1. ஆஸ்பத்திரி வீதி நிர்மாண வேலை 5-ம் வட்டாரம் நீளம் 875 அடி | 50-00 | 10-00 |
| 2. தேவாலய வீதி நிர்மாண வேலை 1-ம் வட்டாரம் நீளம் 1435 அடி | 50-00 | 10-00 |
| 3. செல்லையா வீதி வடிகால் அமைத்தல் வட்டாரம் 3, 4 | 50-00 | 10 00 |

சி. வைரமுத்து
தலைவர்
பட்டின சபை, சங்கானை

பட்டின சபை அலுவலகம்,
சங்கானை. 18-5-77. 6226

## வரி விளம்பரம்

### வகுப்புகள்

வெல்டிங் (Electric & Gas மூன்று மாதம், இலெக்றிக் வயறிங் மூன்று மாதம், ரேடியோ ஆறு மாதம் காலை, பிற்பகல், மாலை நேர வகுப்புகள் எமது N.I.E.T. டிப்ளோமா பெற்று வெளிநாடுகளில் ஏராளமானோர் வேலை பார்க்கிறார்கள். National Institute of Engineering Technology மைற்மண்டபம், 128, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 6210

### கல்வி

பட்டதாரி ஆசிரியர்கள் வீடுகள் சென்று ஆங்கில இலக்கணம், இலக்கியம், பொது அறிவு, ஆங்கிலப் பேச்சு (Spoken English) கற்றுக் கொடுக்கப்படும். விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 6212, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 6212

### தேவை

Book-keeping தகைமை உள்ள ஒரு பெண்ணும், கணக்காளர் பதவிக்கு ஒரு ஆணும் தேவை. மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. உடன் விண்ணப்பிக்கவும். கொழும்பு ஸ்ருடியோ, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 6222

## மிருசுவில் கிராமசபை
# கேள்விப் பத்திர விளம்பரம்

மிருசுவில் கிராமசபையால் பின்வரும் வேலைகளுக்கான கேள்வி விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. சபைக்கு திருப்திகரமானமுறையில் வேலையைச் செய்து கொடுக்கக்கூடிய ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். 7-06-1977ம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 12-00 மணிவரை கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

8-06-1977 திகதி காலை 10 மணிக்கு முன்பு கேள்வி விண்ணப்பங்கள் தலைவருக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கேள்வி விண்ணப்பத்தின் பிரதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் யாழ்ப்பாணம், அவர்களுக்கு 8-06-1977-ம் திகதி கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல்வேண்டும், மேலதிக தகவல்களை இக்காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம்.

1. பூக்கிணற்றடி ஒழுங்கை பாலவேலை.
2. அரசினர் பாடசாலை தெரு.
3. கரம்பகம் வேதக்கால் ரோட்டு.
4. அடிவளைந்தான் ரோட்டு.

ஒப்பம்:
க. குலசேகரம்பிள்ளை J. P.
அக்கிராசனர்,
கிராமசபை, மிருசுவில்.

கிராமசபை அலுவலகம்,
மிருசுவில்.
18-05-1977. 6227

## வருமான வரி வேட்டை

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்தில் முகாமிட்டிருக்கும் வருமான வரித் திணைக்களப் பரிசோதனைக் குழுவினர் குடாநாட்டின் பல பாகங்களிலும் 'வேட்டை'யை

(7ம் பக்கம் பார்க்க)

## காரைநகர் இந்துக்கல்லூரி முதலிடம்

சுழிபுரம், வியாழன்

''கட்டுப்பாடு, மனவலிமை, ஒழுக்கம் ஆகியவற்றைப் போதிப்பது விளையாட்டாகும். ஆதலால்தான் இன்றைய கல்வி கற்பிக்கும் திட்டத்தில் விளையாட்டுக்குமுதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. மாணவர்கள்விளையாட்டிலும் கவனம் செலுத்த வேண்டும். நல்லஉடல்அமைப்பு இருந்தால் கல்வியில் அதிககவனம் செலுத்தமுடியும். வட்டுக்கோட்டை கல்வி வட்டாரத்திலுள்ள இருபத்தைந்துக்கு மேற்பட்ட பாடசாலைகள் ஒரு கட்டுப்பாட்டுக்குள் விளையாட்டுகளிலும் பங்குகொண்டு ஒழுங்கை நிலைநாட்டியது, சிறந்தஅம்சமாகக் காணக்கூடியதாக இருந்தது.'' என்றுவட்டுக்கோட்டைக்கல்வி வட்டாரப் பாடசாலைகளின் மெய்வல்லுனர் போட்டிக்கு பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டு பரிசுகளை வழங்குகையில் வடமாநில கல்வியதிபதி திரு. க. சிவநாதன் குறிப்பிட்டார்.

விளையாட்டுப்போட்டி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. விழாவுக்கு வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப. சண்முகநாதன் தலைமை வகித்தார். வடமாநில உடற்கல்வி அதிகாரி வே. தங்கராசா தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். போட்டி முடிவின்படி ஆண்கள் பிரிவில் முதலாவது இடத்தை 160 புள்ளிகளைப் பெற்ற காரைநகர் இந்துக்கல்லூரியும், இரண்டாவது இடத்தை 78 புள்ளிகளைப் பெற்ற வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியும், மூன்றாவது இடத்தை 52 புள்ளிகளைப் பெற்றுசுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் பெற்றுக்கொண்டன. பெண்கள் பிரிவில் முதலாவது இடத்தை 109 புள்ளிகளைப் பெற்று பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியும், இரண்டாவது இடத்தை 89 புள்ளிகளைப் பெற்று வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியும், மூன்றாவது இடத்தை 57 புள்ளிகளைப் பெற்று சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

## அன்னை சாரதா ஜயந்திவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

தூயஅன்னை ஸ்ரீசாரதாதேவி ஜயந்தி விழா இம்மாதம் 22-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை ஸ்ரீசாரதாதேவி சேவாச்சிரமத்தில் கொண்டாடப்படவிருக்கிறது. கொக்குவில் ஸ்ரீராமகிருஷ்ண வித்தியாசாலை அதிபர் திருமதி. சரஸ்வதிதேவி கணேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் இவ்வித்தியாசாலை ஆசிரியை செல்வி மாணிக்கவல்லி தியாகராசா, அன்னையார் பற்றிக்கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார். (அ)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்
அரியாலை ஆறுமுகம் கை. பெ. இராசம்மா.

வழக்காளி

இல. 10926 Vs
(1) அரியாலை முத்து சுப்பையாவும்
(2) பெண் சிவபாக்கியமும் எதிராளிகள்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் M B /10926ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணியை 1977ம் ஆண்டு ஆனி மீ 22ந திகதி (1977-6-22) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபா 1947-50 இதில் ரூபா 1500/-க்கும் 26-6-69 தொடக்கம் 9-5-70வரைக்கும் 100க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத் வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 407-65 (செலவழித்த செலவு ரூபா 254-45 வெலியாத்துச் செலவு ரூபா 80-20 எதிர்வரும் செலவு ரூபா 73-00) இதில் ரூபா 1000/- கொடுபட்ட வகையில் கழிபடவேண்டியது.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோயிற்பற்று சிவியாதெரு இறை 'புளியடி வளவும் அப்பையன் வளவும் மற்றும் துண்டுகளும் நில. பர. 3 மூன்றும் வீடும் செய்பயிர் வான் பயிர்களும் எல்லை கிழக்கு கையொழுங்கை, வடக்கு கணபதி பெண் கண்மணியினுதனம் மேற்கு செல்லத்துரை பெண் பரஞ்சோதியினுதனம் தெற்கு ஒழுங்கை, இதடங்கலிற் வடக்கெல்லைக்காணியிலிருக்கும் கிணற்றில் தண்ணீர் பங்கும் இறைவாய்க்காலும் வழிப் பாவிப்புரித்தும்.

க. சுப்பிரமணியம்,
கொம்மிஷனரும்
விலைமதிப்பாளரும்.

நம்பர் 89, 1ம் குறுக்குத்தெரு.
யாழ்ப்பாணம் 8-4-77 6229

## முக்கிய அறிவித்தல்

திரு. து. நடராஜபிள்ளை (கணக்கப்பிள்ளை) என்பவரிடம் செய்து கொள்ளும் கொடுக்கல் வாங்கல்களுக்கு நாமோ எமது ஸ்தாபனமோ பொறுப்பாளிகளில்லையென்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

உரிமையாளர்:
சி. எஸ். கே. ஓயில் மில்ஸ்,
யாழ்ப்பாணம். 6218

## முக்கிய அறிவித்தல்

எமது ஸ்தாபனத்தின் பெயரால் சிலர் மோசடி செய்துள்ளதான பல புகார்களினிமித்தம், தயது செய்து எம்முடன் நேரடித்தொடர்புடன் தங்களுக்குத் தேவையான ஓடர்களை செய்து பெற்றுக்கொள்ளும்படி பணிவன்புடன் வேண்டுகிறோம்.

இராஜன் இரும்புத்தொழிற்சாலை
8, ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம்
6230

# "தி. மு. க.வுடன் உறவு கொண்டது தவறு என்பது இப்போது புரிகிறது"

## சென்னையில் பிரதமர் தேசாய்

சென்னை, மே 19

''லோக்சபா தேர்தலின் போது தி. மு. க. வுடன் உடன்பாடு செய்துகொண்டது தவறு என்பதனை இப்போதுதான் நாம் உணர்ந்து கொண்டோம்'' என்று சென்னையில் நடைபெற்ற நிருபர்கள் மத்தியில் பேசுகையில் பாரதபிரதமர் திரு மொரார்ஜி தேசாய் கூறினர்.

தமது மந்திரிசபையில் பெண்களுக்கும் இடமளிக்கப்படும் என்றும் கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில் திரு. தேசாய் சொன்னர்.

### கோயம்புத்தூரில்

தீண்டாமையை 5 ஆண்டுகளில் நாட்டைவிட்டு முற்ருக ஒழித்துக்கட்ட ஜனதா அரசு தீவிர முயற்சிகளை மேற்கொள்ளும்'' என்றும் பாரத பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் கோயம்புத்தூரில் நடைபெற்ற தேர்தல்பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

பிரதமர் தமது உரையில் மேலும் கூறியதாவது!

''அரசு சிறுபான்மையோரின் உரிமைகளையும் பறிக்காது. சிறுபான்மையோரின் உரிமைகளைப் பாதுகாக்க வென கமிஷன் ஒன்று அமைக்கப்படும். இது அரசைக் கட்டுப்படுத்தும் அதிகாரம்கொண்டதாக இருக்கும்.

ஜனதா அரசு லோக்சபா தேர்தல் வேளையில் அளித்த வாக்குறுதிகளைப் படிப்படியாக நிறைவேற்றிவருகிறது.

''பத்திரிகைத்துறைச் சுதந்திரம் பாதுகாக்கப்படுகிறது. நீதித்துறை செவ்வனே செயற்படுகிறது.

''நீதிபதிகளை அரசு கட்டுப்படுத்தும் நிலை இருக்கக் கூடாது''

### காமராஜரை இந்திரா அரசு அவமதித்தது

பிரதமர் திரு. தேசாய் ஈரோடில் மறைந்த தலைவர் திரு. காமராஜரின் உருவச் சிலையைத் திறந்துவைத்தார்.

இவ் விழாவில் பிரதமர் பேசுகையில் ''முன்னைய காங்கிரஸ் அரசு காமராஜரை அவமானப்படுத்தியது'' என்ருர்.

''காமராஜர் ஏழை மக்களின் நலனுக்காகத் தம் வாழ்வையே அர்ப்பணித்தவர் என்ருர் பிரதமர்.

### உயர்மட்ட லஞ்சம் ஒழிக்கப்படும்

பின்னர் சேலத்தில் நடைபெற்ற தேர்தல்பிரசாரக் கூட்டம் ஒன்றில் பிரதமர் பேசுகையில் ''உயர்மட்டத்திலான லஞ்ச ஊழலை ஒழித்துக்கட்ட அரசு தயங்காது.

''அரசு இயந்திரங்கள் துஷ்பிரயோகங்கள் செய்யப்படாததும், தேர்தல்காலங்களில் அரசு வாகனங்கள் பயன்படுத்தப்படுவது முதலானவை சட்டரீதியாக இனிமேல் தடுக்கப்படும். 19 மாதங்களாக பத்திரிகைச் சுதந்திரமும் மக்களின் ஜீவாதார உரிமைகளும் பறிக்கப்பட்டிருந்தன. இந்நிலையை மாற்றியது ஜனதா அரசுதான்.

தம் நாட்டில் 80 சதவிகித மானேர் கிராமப்புறங்களில் தான் வாழ்கிருர்கள். அவர்களின் வளமான வாழ்வுக்கு அரசு சகல நடவடிக்கைகளும் எடுக்கும்'' என்ருர். (உ)

# ரஷ்யரை வெளியேற சூடான் உத்தரவு

கார்ட்டும், மே. 19

சூடானிலுள்ள இராணுவப் பயிற்சியளிக்கும் சோவியத் யூனியனைச் சேர்ந்த அனைவரும் நாட்டைவிட்டு வெளியேறி விடவேண்டுமென்று சூடான் அரசு உத்தரவிட்டுள்ளது.

இதனையடுத்து சோவியத் யூனியனைச்சேர்ந்தஇராணுவப் பயிற்சியாளர்கள் மூன்றுவிமானங்களில் சூடானை விட்டு நேற்றுப் புறப்பட்டுச்சென்றதாக கார்ட்டும் செய்திகள் தெரிவிக்கின்றன. (உ)

# இஸ்ரேல் தேர்தல் முடிவு: அரபு நாடுகள் அதிருப்தி!

கெய்ரோ, மே. 19

இஸ்ரேல் தேர்தலில் லிக்கோயிட் கூட்டணி வெற்றி பெற்றிருப்பது குறித்து அரபு வட்டாரங்கள் அதிருப்தி தெரிவித்துள்ளன.

இது யுத்தப்பிரகடனத்திற்கு சமமானது என்று பலஸ்தீன விடுதலை இயக்கப்பிரதிநிதி ஒருவர்கருத்துவெளியிட்டுள்ளார்.

புதிய அரசு எல்லைகளை விஸ்தரிக்கும் முயற்சியில்ஈடுபட்டால் கடுமையான எதிர்ப்புத்தெரிவிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று கெய்ரோவில் இருந்து வெளியான உத்தியோகபூர்வ அறிக்கைகள் தெரிவித்தன. (உ)

# ஸாம்பியா — றெடீஷியா துருப்புகள் மோதல்

லுஸாக்கா, மே. 19

ஸாம்பியா துருப்புகளுக்கும் றெடீஷியத் துருப்புகளுக்கும் இடையில் கடும்மோதல் ஏற்பட்டுள்ளது.

பீரங்கித் தாக்குதல்களும், துப்பாக்கிப் பிரயோகங்களும் இடம்பெற்றதாக லுசாக்கா அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஸாம்பியாவுக்கு முழுஆதரவு வழங்க தான்ஸானியாமுன்வந்துள்ளது.

பீரங்கித் தாக்குதல்களால் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

### ஆயுதக் குறைப்பு:

# அமெரிக்கா-ரஷ்யா இணக்கம் காணும்?

ஜெனிவா, மே. 19

ஆயுதபாவனைக் குறைப்புத் தொடர்பாக அமெரிக்காவுக்கும், சோவியத் யூனியனுக்கும் இடையே புதிய அடிப்படை ஒன்று தோன்றியுள்ளது.

அமெரிக்கவெளிநாட்டமைச்சர் திரு. சைரஸ் வான்ஸும், சோவியத்யூனியன் வெளிநாட்டமைச்சர் திரு. குரோமிகோவும் நேற்று ஜெனிவாவில் இது சம்பந்தமாகச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தினர்.

இதேவேளை, சோவியத் வெளிநாட்டமைச்சர் திரு. குரோமிகோ மத்திய கிழக்கு நாடுகள் பிரச்னை தொடர்பாக ஐ. நா சபை பொதுச்செயலாளர் கலாநிதி வால்ட்ஹெய்மைச் சந்தித்துப்பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

### தமிழ்நாடு தேர்தல்:

# 234 தொகுதிகளிலும் 2657 பேர் போட்டி

சென்னை, மே 19

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் மொத்தம் 2657 வேட்பு மனுக்கள் தாக்கல்செய்யப்பட்டுள்ளன.

இத் தகவல் இன்று சென்னையில் அதிகாரபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டது.

முன்னெப்போதும் இவ்வளவு கூடுதலான தொகை வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படவில்லை யென்றும் தெரிவிக்கப்பட்டது.

### 1971ஐ மிஞ்சியது

1971-ம் ஆண்டு நடைபெற்ற சட்டசபைத் தேர்தலுக்கு 1454 வேட்பு மனுக்களே தாக்கல்செய்யப்பட்டிருந்தன.

சென்னையில் 144 வேட்பு மனுக்களும் தென்ஞற்காடு மாவட்டத்தில் 234 வேட்பு மனுக்களும், வடஆற்காடு மாவட்டத்தில் 247 வேட்பு மனுக்களும் மதுரையில் 229 வேட்பு மனுக்களும் ராமநாதபுரம், நீலகிரி, திருநெல்வேலி, சேலம், தர்மபுரி, புதுக்கோட்டை; மாவட்டங்களில் முறையே 202, 47, 200, 216, 102, 74 வேட்பு மனுக்களும் தாக்கல்செய்யப்பட்டுள்ளன.

### பாண்டிச்சேரியில் 224 வேட்பாளர்

இதேவேளை, பாண்டிச்சேரி சட்டசபைத் தேர்தலுக்கு 30 தொகுதிகளுக்கும் மொத்தம் 224 வேட்பு மனுக்கள் தாக்கல்செய்யப்பட்டுள் ளன.

ஒவ்வொரு தொகுதியிலும் குறைந்தது 4 பேர் வீதம் போட்டியிடுகிருர்கள். (உ)

## கலாநிதி விருது

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கைப் பல்கலைக்கழக விஞ்ஞானக் கவுன்சில், இவ்வாண்டுக்கான விவசாய எம். எஸ்சி. கலாநிதி விருதை, திருமதி ஜானகிதேவி, ரன்முத்துகலவுக்கு வழங்கியுள்ளது. இவர், முன்னர் விஞ்ஞானப் பட்டதாரியாகத் தெரிவுசெய்யப்பட்டவராவார். (கெ-உ)

## நியமனம்

யாழ்ப்பாணம், வெள்ளி

நயினதீவைச்சேர்ந்த செல்வி நல்லையா பரமேஸ்வரி நயினதீவு மகாவித்தியாலயத்துக்கு வர்த்தக உதவி தராதரமற்ற ஆசிரியையாக நியமனம் பெற்றுள்ளார்.

அனலைதீவைச் சேர்ந்த திரு. சுந்தரம்பிள்ளை சத்தியமூர்த்தி நாரந்தனை ரோ. க. த. கலவன் பாடசாலைக்கு உதவி வர்த்தகதராதரமற்ற ஆசிரியராக நியமனம் பெற்றுள்ளார். (கெ)

# தேர்தல்அதிகாரிகளின்முடிவு தி. மு. க. தலைவர் ஆட்சேபம்

சென்னை, மே 19

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் முதல்கட்ட வாக்கெடுப்பு குறித்து எடுக்கப்பட்டுள்ள முடிவை ஆட்சேபித்து திராவிடமுன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி, தலைமைத் தேர்தல் கமிஷனர் திரு. பி. சுவாமிநாதனுக்கும் தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. ஓஸாவுக்கும் தந்திகள் அனுப்பிவைத்துள்ளார்.



ஜூலை 12-ம் திகதி அளிக்கப்படும் வாக்குகளின் முதல் கட்ட எண்ணிக்கை வேலை 14-ம் திகதி முற்பகல் 11-00 மணிக்கு ஆரம்பமாகும் என்ற தேர்தல் அதிகாரிகளின் முடிவையே கலைஞர் ஆட்சேபித்துள்ளார்.

### ஆட்சேபிக்க காரணம் என்ன?

''வாக்குகள் இரகசியமாக வைக்கப்படும் பொருட்டு இந் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருந்தாலும் விஷமவதந்தி பரவுவதைத் தடுக்கும் வகையிலும் சட்டப்பிரச்னை, ஒழுங்குப் பிரச்னை எழுவதைத் தவிர்க்கும்வகையிலும் முதல் கட்ட வாக்கெடுப்பு வேலைகளை ஒருநாள்ஒத்திப்போடுமாறும்'' கலைஞர் தமது தந்திகளில் கோரியுள்ளார்.

''14-ம் திகதி நடைபெறும் வாக்கெடுப்பை இம் முடிவு பாதிக்கக்கூடும்'' என்றும் கலைஞர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

## கருணாநிதியை எதிர்த்து ஹண்டே போட்டி

சென்னை, மே. 19

திராவிட முன்னேற்றக் கழகத்தலைவர் கலைஞர் மு. கருணாநிதியை எதிர்த்து அண்ணாநகர் தொகுதியில் சுயேச்சையாக டாக்டர் எச். வி. ஹண்டே போட்டியிடுகிருர்.

ஜனதாகட்சியில் இருந்து ராஜினாமாச் செய்துள்ளஇவர், ''தி. மு. க. தலைவரை எதிர்த்துப் போட்டியிடுவதற்குப் பொருத்தமான ஒரு வேட்பாளரை இத்தொகுதியில் நிறுத்த ஜனதாகட்சி தவறிவிட்டதால் இத்தொகுதியில் அவரை எதிர்த்து நான் போட்டியிட முன்வந்தேன்'' என்று தெரிவித்துள்ளார். (உ)

# யாழ்.தொகுதியில் இலங்கை தி. மு. க. போட்டியிடுமாம்

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கைத் திராவிடமுன்னேற்றக் கழகத்தின் செயற்குழுக்கூட்டம் யாழ்.சட்டநாதர் வீதியிலுள்ள கழகத்தின் செயலகத்தில் நடைபெற்றது.

இன்றைய அரசியல்நிலை பற்றியும் எதிர்வரும் பொதுத் தேர்தல்பற்றியும் ஆராயப்பட்டது. யாழ்ப்பாணத் தொகுதிக்கு திரு. வல்லிபுரம்சண்முகராசாவை வேட்பாளராக நிறுத்துவதென முடிவுசெய்யப்பட்டது.

நல்லூர், வட்டுக்கோட்டை மன்னர் ஆகிய தொகுதி நிலவரங்கள் பற்றி ஆராயப்பட்டு நல்லூர் தொகுதிக்கு அமைப்பாளராக டாக்டர் கந்தசாமியையும், வட்டுக்கோட்டை அமைப்பாளர்களாக திரு. ஆ. ஸ்ரீநிவாசனும், திரு. தயாபரனும் நியமிக்கப்பட்டனர்.

மற்றும் சில தொகுதிகளில் வேட்பாளர்கள் நியமிப்பது பற்றியும் ஆராயப்பட்டு இறுதி முடிவை இம்மாதம் 22ந்திகதி மீண்டும் செயற்குழு கூடும் போது எடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (வே-நி-உ)

## இடமாணவர் கஷ்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி.

பாடசாலைப் பிள்ளைகள் பிரயாணம் செய்யும் புகைவண்டியில் பெட்டிகள் போதாமையால் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால் மாணவர்கள் மிதிபலகைகளில் நின்று செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. இப்புகையிரத சேவை காங்கேசனிலிருந்து பளைவரைக்கும் ஈடுபடுத்தப் படுகிறது. (கு-அ)

**மணிவாக்கு**

கடவுள் நம்பிக்கையுள்ளவன் ஒருபோதும் கலங்கமாட்டான்.
—காந்திமகான்.

ஈழநாடு
THE EELANAADU

## தேர்தல் வந்துவிட்டது!

தேர்தல் வருமா; வராதா?

எப்போது பேரவை கலைக்கப்படும்; எப்போது தேர்தல் நடைபெறும்?

இந்தக் கேள்விகளுக்கு இப்போது பதில் கிடைத்துவிட்டது.

இலங்கைக் குடியரசின் முதலாவது தேசியஅரசுப் பேரவை கலைக்கப்பட்டுவிட்டது.

அடுத்தமாதம் அதாவது ஜூன் மாதம் ஆறும் தேதி வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படும். ஜூலைமாதம் 21ந் தேதி தேர்தல் வாக்களிப்பு நடைபெறும்.

இன்னும் இரண்டு மாதங்களில் இலங்கையில்பொதுத் தேர்தல் முடிந்து அடுத்த அரசாங்கம் எதுவென்பது தெரிந்துவிடும்.

இரண்டுமாத இடைவெளிதான் என்றாலும் இரண்டு வருடங்களுக்கு முன்னரேயே பொதுத்தேர்தலை எதிர்பார்த்துத் தயாராகிக் கொண்டுவந்த கட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்கும் இதுபெரிய காரியமல்ல.

இம்முறை தேர்தலில் சகல தொகுதிகளிலும்வேட்பாளர்கள் பலர் நிற்பார்களென்று எதிர்பார்க்கஇடமுண்டு.

தமிழ்த் தொகுதிகளில் ஒரே இலட்சியத்தின் அடிப்படையில் இரண்டு மூன்று கட்சிகளும் நான்கு ஐந்து வேட்பாளர்களும் போட்டியிடுவதற்கு முன்வந்து ஆதரவு திரட்டத் தொடங்கிவிட்டனர்.

அமைதியான முறையில் தேர்தல் நடைபெறுவதற்கு வேட்பாளர்களும் வாக்காளரும் ஒத்துழைக்க வேண்டியது அவசியம்.

எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்ற நிலை இன்னும் இரண்டுமாத காலத்துக்கு மட்டுமே என்பதை மறந்துவிடாமல் தொடர்ந்தும் மன்னர்களாக இருப்பதற்கு வாக்காளப் பெருமக்கள் நிதானமாகச் சிந்தித்து தமது வாக்குகளை நேர்மையாகவும் விவேகமாகவும் உபயோகிப்பார்களென்று எதிர்பார்ப்போம்.

தேர்தல் வருமா, வராதா என்ற கேள்விகளுக்கும் பேரவை கலைக்கப்படுமா என்ற கேள்விக்கும் விடை கிடைத்துவிட்டது.

அடுத்து அரசாங்கம் அமைப்பது யார் என்ற கேள்விக்குத்தான் இனி விடை தெரிய வேண்டும். பொறுத்திருப்போம்.

# இலங்கைக் குடியரசின் முதலாவது பொதுத்தேர்தல்

— நமது விசேஷ நிருபர் —

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்ட, நமது நாட்டின் முதலாவது தேசிய அரசுப்பேரவை, கடந்த புதன்கிழமை நள்ளிரவுடன் கலைக்கப்பட்டுவிட்டது.

பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் சிபார்சின்மீது ஜனாதிபதி வில்லியம் கோபல்லாவ வெளியிட்ட பிரகடனத்தில், தேசிய அரசுப் பேரவை புதன்கிழமை நள்ளிரவுடன் கலைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### முதலாவது தேர்தல்

1972-ம் ஆண்டு மே மாதம் 22-ம் திகதி இலங்கை, புதிய அரசியலில் வடிவம்கொண்டு ஸ்ரீலங்கா குடியரசானதன்பின்னர், பாராளுமன்றம் என்ற பெயர்நீங்கி, தேசிய அரசுப் பேரவை தோன்றியது. முதலாவது தேசியஅரசுப்பேரவையின் முதலாவது பொதுத்தேர்தல் ஜூலை மாதம் 21-ந் திகதி நடைபெறவிருக்கிறது. இதற்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல்செய்யும் தினம், அடுத்தமாதம் ஆறும்திகதி என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் பாராளுமன்றம் இருந்தபோது - நூற்றுஐம்பத்தொருதொகுதிகள் இருந்தன. இதனுடன் ஆறு நியமன அங்கத்தவர்களும் இருந்தனர். புதிய தேசியஅரசுப் பேரவை அமைக்கப்பட்டதன் பின்னர் தொகுதிகளின் எண்ணிக்கை 151லிருந்து 167 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. நியமனம் மூலம் பிரதிநிதிகள் எவரும் தெரிவு செய்யப்படமாட்டார்கள்.

### இம்மாதம் தெரியும்

இந்த 167 தொகுதிகளிலும், எத்தனைபேர் போட்டியிடுவார்கள், எத்தனை கட்சிகள் தேர்தலில் குதிக்கப்போகின்றன, தேர்தல் கமிஷனரால் எத்தனை புதிய கட்சிகளுக்கு அங்கீகாரம் கிடைக்கும் - அங்கிகாரம் கிடைக்காது என்பதெல்லாம் இம்மாதம் தெரிந்துவிடும்,

### கட்சிகள் நிலைவரம்

நாட்டின் முக்கிய அரசியல் கட்சிகளாக, ஐக்கியதேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்காசமசமாஜக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, கம்யூனிஸ்ட்கட்சி ஆகியவை விளங்குகின்றன. இவற்றுடன் சிலபுதிய அரசியல் கட்சிகளும் இப்பொழுது திடீரெனத் தோன்றி வருகின்றன. இவற்றில் தமிழர் விடுதலைக் கூட்டணிதான் முதன்முதலில் தனது அபேட்சகர்கள் பட்டியலை வெளியிட்டுள்ளது; இக்கூட்டணி மொத்தம் 25தொகுதிகளில் போட்டியிடுகிறது. ஐக்கியதேசியக்கட்சிஇம்மாதம் 25-ம் திகதி கண்டியில் தனது முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தை நடத்துகிறது. அதற்குமுன்னர் அபேட்சகர் பட்டியலைக் கட்சிவெளியிடும். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அடுத்தவாரத்தில் தனது அபேட்சகர்ப்பட்டியலை வெளியிடும்.

### புதிய அரசியலமைப்பு

நாடு குடியரசானதைத் தொடர்ந்து கொண்டுவரப்பட்ட புதிய அரசியலமைப்பு, முன்னரும் பிறகும் பலத்த கண்டனத்துக்கும், எதிர்ப்புக்கும்ஆளானது. தமிழரசுக் கட்சி (தமிழர்விடுதலைக் கூட்டணியாகமுன்)யும் எதிர்ப்பைத் தெரிவித்து, பகிஷ்காரம் செய்தது! புதிய அரசியல் அமைப்பை இந்தநாட்டுத் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை உலகுக்கு உணர்த்தும் வகையில் திரு.எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தமது அரசுப்பேரவை அங்கத்துவப் பதவியைத் துறந்து, மீண்டும் தமது தொகுதியில் போட்டியிட்டு பெருவெற்றியீட்டினர்! அரசியலமைப்பின் அடிப்படை நோக்கங்களே தவறாக இருக்கின்றன என்று ஐக்கிய தேசியக்கட்சி குரல் எழுப்பியது. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால், இந்த அரசியல் அமைப்பு தூக்கி வீசப்படும் என்றும் புதிய அரசியலமைப்பை கட்சி கொண்டுவரும் என்றும் திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தன எச்சரிக்கை செய்தார். "தன்னுதிக்கம் பெற்ற சுதந்திர இலங்கை என்று ஆட்சியாளர்கள் கூறிய போதிலும், அந்நிய பொருளாதார ஆதிக்கத்திலிருந்து நாடு விலகிக்கொண்டதாக இல்லை. புதிய அரசியலமைப்பில் திருத்தம் செய்யவேண்டும்" என்று திரு. பிறின்ஸ்குணசேகரா கேட்டுக்கொண்டார். டாக்டர் டபிள்யூ. தஹநாயக்கா, "புதிய அரசியலமைப்பு பழைய கொள்கைகளையே அடிப்படையாக கொண்டுள்ளது. வெஸ்ட்மினிஸ்டர் மாதிரியையே புதிய அரசியலமைப்பு பின்பற்றியுள்ளது. திருத்தங்கள் செய்யவேண்டும்" என்றார். இத்தனைக்கும் நடுவே பதினுறு அத்தியாயங்களையும, நூற்று முப்பத்து நான்கு ஷரத்துகளையும் கொண்ட புதிய அரசியல் அமைப்பு, எவரது எதிர்ப்பையும் கண்டு தயங்காது அங்கிகாரம் பெற்று செயல்வடிவம் கொண்டது!

### மறைந்த தலைவர்கள்

தேசிய அரசுப்பேரவை அமைக்கப்பட்டபின்னர்- கடந்த ஐந்துவருட தேசிய அரசுப் பேரவையில் முழக்கமிட்ட இரு பெரும் தலைவர்கள் உட்பட எம்.பிக்களும், அமைச்சர்களும் மறைந்தது, ஒரு துர் அதிர்ஷ்டம் என்று கூறலாம். திரு. டட்லி சேனநாயக்கா, திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம், திரு. சுகததாச, திரு. ஜோர்ஜ்ராஜபக்ஷ, திரு. பாரிஸ் பெரேரா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்.

### காபந்து அரசு

இன்று- தேசிய அரசுப் பேரவை கலைக்கப்பட்டு, காபந்து அரசாங்கம் ஆட்சியில் உள்ளது. பொதுத்தேர்தல் நடைபெறும்வரை பிரதமர் திருமதி சிறிமாவோபண்டாரநாயக்கா தலைமையிலான காபந்து அரசாங்கமே ஆட்சியில் இருக்கும்.

## பஸ் டிப்போ வேலைநிறுத்தம்

இலங்கைப்போக்குவரத்துச் சபையின் காரைநகர் டிப்போ ஊழியர்கள் கடந்த நான்கு தினங்களாக வேலைநிறுத்தம் செய்துவருகின்றனர்.

இந்த வேலைநிறுத்தத்தினல் காரைநகர், வட்டுக்கோட்டை, சங்கரத்தை, நவாலி, அராலி ஆகிய இடங்களில் பஸ் சேவை முற்ருக ஸ்தம்பிதமடைந்துள்ளது.

வலிமேற்குப் பகுதியில் ஏனைய சில இடங்களில் பஸ் கிடைப்பதில் பிரயாணிகள் பல சிரமங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது.

வலிமேற்குப் பகுதியில் இருந்து பாடசாலை செல்லும் பிள்ளைகளும், அலுவலகங்களுக்குச் செல்லும் ஊழியர்களும், தொழிலுக்குச் செல்பவர்களும் பஸ் சேவை ஸ்தம்பித்துள்ளதால் அனுபவிக்கும் கஷ்டநஷ்டங்களைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை.

இந்த வேலைநிறுத்தத்தைச் சுமுகமாகத் தீர்த்துவைப்பதற்காக எடுக்கப்பட்ட முதல் முயற்சிகள் வெற்றி அளிக்கவில்லையாம்.

காரைநகர் டிப்போவில் தண்ணீர் வசதி, படுக்கை வசதி, தேநீர்ச்சாலை, புதிய பஸ் வண்டிகள், பொறியியல் அதிகாரிகள், மேல் நடவடிக்கை ஆகிய கோரிக்கைகளை ஊழியர்கள் சமர்ப்பித்துள்ளனர். இக்கோரிக்கைகளின் பேரிலேயே இந்த வேலைநிறுத்தம் நடைபெறுகிறது.

டிப்போவிலுள்ள குறைகளைத் தீர்க்கவேண்டியது இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பொறுப்பு.

ஊழியர்களும் நிர்வாகிகளும் சேர்ந்து பேசித் தீர்க்கவேண்டிய பிரச்னைகளுக்காக அப்பாவிப் பிரயாணிகளான பொதுமக்கள் அல்லற்படவேண்டுமா?

இந்த வேலைநிறுத்தம் தொடங்கி நான்கு நாட்களாகின்றன. வேலைநிறுத்தம் முடிவுக்கு வரக்கூடிய அறிகுறிகளையும் காணவில்லை.

இனியும் இந்த வேலைநிறுத்தத்தில் இ. போ. சபை அசமந்தமாக இராது உடன் தலையிட்டு வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரவேண்டியது அவசியம்.

## "மூதாதையர் விதைத்த இனப்பிரிவை ஒழிப்போம்"

யாழ்ப்பாணம்,வெள்ளி

"ஒவ்வொருவரும் நேர்மையுடனும், கட்டுப்பாடுடனும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடனும் ஒற்றுமையாக இருந்து, ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இதற்கு நானும் எல்லாவித உதவியுமளிப்பேன்" என்று நல்லூர் வடக்கு சனசமூகநிலைய நாடகவிழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட திரு மு. ஆலாலசுந்தரம் கூறினர்.

இவ்விழாவிற்கு தேசிய லொத்தர்சபை யாழ். பகுதிப் பொறுப்பாளர் திரு.எஸ். நவரத்தினம் தலைமைவகித்தார். திரு. மு. ஆலாலசுந்தரம் மேலும் பேசுகையில், "இளைஞர்கள் ஒற்றுமையுடன் இது போன்ற சனசமூக நிலையங்களை ஏற்படுத்தி இச் சனசமூக நிலையங்கள் மூலம் மக்களின் நன்மைக்கான முக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கைத்தொழில் நிலையங்களையும் மற்றும் விவசாயம் போன்ற தொழில்களையும் ஏற்படுத்தி இளைஞர்களை அதில் ஈடுபடச் செய்தல் வேண்டும். இதனுல் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிவதுடன் மக்கள் முன்னேறவும் வழியுண்டு" என்று கூறினர்.

பிரபல எழுத்தாளர் கே. டானியல் பேசுகையில் "தேசியத்தையும் சமத்துவத்தையும் நாம் முதலில் நிலைநாட்ட வேண்டும். அப்போதுதான் இது போன்ற இயக்கங்கள் சிறப்பாக நடத்துவதற்கு வழி பிறக்கும். எமது மக்கள் மத்தியில் நிலவுகின்ற இனப்பாகுபாடு முதலில் ஒழிக்கப்பட வேண்டும். நமது மூதாதையர் தம் இனத்துள்ளே விதைத்த பிரிவை இன்றைய சமுதாயமும் கடைபிடித்து வருகின்றது. இதை முதலில் ஒழித்து எல்லோரும் ஒரே இன மக்கள் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும்" என்று கூறினர்.

இவ்விழாவில் நல்லை அமிழ்தன், குமார் தனபால், எஸ். சொல்வேந்தன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். இதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் நாடகங்களும் இடம் பெற்றன. (கு)

## மாணவருக்கு குறுகியகால தொழிற்பயிற்சி

கொழும்பு, வியா.

உயர்கல்வி கற்காமல் வருடாந்தம் பாடசாலையைவிட்டு வெளியேறும் மாணவர்களுக்கு குறுகியகால தொழிற்பயிற்சி அளிக்கும் திட்டத்தைக் கல்வி அமைச்சு தீவிரமாக அமுல் செய்துவருகிறது.

600 பாடசாலைகளில் இப்பயிற்சிவகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஏற்கனவே சில பாடசாலைகளில் இவ்வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப்பயிற்சிபெறும் மாணவர்களுக்கு வங்கிகள்மூலம் சுமார் 1000 ரூபாமுதல் 1500 ரூபா வரை கடன்உதவி வழங்கப்பட்டு வருகிறது என்று கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ)

### வீடமைப்புக் கடன்:

## விண்ணப்பங்களை பரிசீலிக்க அமைச்சர் உத்தரவு

கொழும்பு, வியாழன்

வீடமைப்புக் கடன் கோரும் விண்ணப்பங்களை உடன் பரிசீலனை செய்யுமாறு வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் வீடமைப்பு ஆணையாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இக்கடனுதவி நிறுத்தப்பட்டது குறித்து ஆராய்ந்த அமைச்சு அதிகாரிகள் தற்போதைய காலகட்டத்தில் கடன் வழங்குவது நிறுத்தப்படுவது அவசியமில்லை என்று தெரிவித்ததையடுத்தே அமைச்சர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (உ)

### உற்சவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கோண்டாவில்மேற்கு சுந்தரசேகரப்பிள்ளையார்கோயில்அலங்காரஉற்சவம் நேற்று ஆரம்பமானது. 13 தினங்கள் உற்சவம் நடைபெறும், தினம் ஸ்ரீலஸ்ரீ பரமாசாரிய சுவாமிகள் இராமாயண கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார். (அ)

# கட்சிகளும், தேர்தலுமல்ல தமிழ் மக்களுக்கு முக்கியம்

பல தலைவர்களின் அரும் பெரும் கருத்துக்கள் இந்த விவாதமேடையில் இடம் பெற்று இருக்கின்றன. அதே நேரத்தில் சாதாரண இளைஞர்களின் கருத்துக்களும் இடம் பெற்றமைக்கு நன்றி கூறுகிறேன்.

இன்றைய அரசியல் நிலையில் தமிழர்களின் நிலை என்ன? தமிழர்களாகிய நாங்கள் பல ஆண்டுகாலமாக பல அரசியல் தலைவர்களின் தலைமையில் இயங்கி வந்திருக்கிறோம். அதே நேரத்தில் இடதுசாரி இயக்கத்தினர் தெரிவித்த கருத்துக்களையும் கொள்கைகளையும் உதாசீனப்படுத்தி இவர்கள் எங்களுக்கு ஏமாற்றுவித்தை காட்டுகிறார்கள் என்றே கருதினோம். அதேவேளை ஒத்துழைப்பும் வழங்க மறுத்துவிட்டோம். ஆனால் இன்றைய நிலையில் நாம் இதை சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இதுவரைகாலமும் நடந்து முடிந்த விடயங்களை கணக்கில் வைக்காமல் இனிமேல் நடக்கப்போகும் சம்பவங்களைக் கணக்கில் எடுக்கலாம் என்றே கருதுகிறேன்.

இற்றைவரைக்கும் எமது சுதந்திரகுரல் தென்இலங்கையில் எழுப்பப்படாமையாலேயே பிரச்னைகள் தீராமல் வளர்வதற்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்திருக்கிறது என்றே கருதுகிறேன். ஆதலால் எமது குரல் தென்இலங்கையிலும் ஒலிக்க வேண்டும். தென்இலங்கை மக்கள் இதை நன்கு உணர வேண்டும். அவர்கள் தங்கள் மனமிளகி தமிழர்களுடைய உரிமையைக் கொடுக்க வேண்டுமென்று கோஷம் எழுப்ப வேண்டும். இது யாரில் தங்கியிருக்கிறது. தமிழர்களாகிய எங்களில் தான் தங்கிஇருக்கின்றது.

எமக்கு உரிமை வேண்டும். மொழி காக்கப்பட வேண்டும். நிலம் காக்கப்பட வேண்டும். கலை, கலாச்சாரம் காக்கப்பட வேண்டும் இதுதான் எமது பிரதான நோக்கமே தவிர தேர்தல் அல்ல. கட்சிகள் அல்ல எங்களுக்கு சரக்குத்தான் வேண்டும். சரக்குத்தர யார் முன்வருகிறார்களோ அவர்களை நாம் ஆதரிப்பதில் தவறு கிடையாது.

**வி. ஏன். ராஜரத்தினம்**
வட்டுக்கோட்டை.

இன்றைக்கு கம்யூனிஸ்ட் கட்சி தனது கொள்கைகளை வடபகுதி அரசியலுக்கு ஏற்ற வகையில் வகுத்திருக்கிறது. செயற்பட ஆயத்தமாக இருக்கிறது. இவர்கள் தென்இலங்கையிலும் இதைப் பிரசாரம் செய்து எமது உரிமைக்கு வாதாடலாம் என்றே கருதுகிறேன். இதற்கு முன்னர் இவர்களும் மற்றும் இடதுசாரிகளும் பெயரளவிலேயே இயங்கி இருக்கிறார்கள். இதை அவர்களுடைய செயலும் நடவடிக்கைகளும் தெளிவாகக் காட்டியுள்ளது. தென்இலங்கையிலும் எமது குரல் எழுப்ப கம்யூனிஸ்ட்கட்சி முன்வரும் பட்சத்தில் நாங்கள் எமது முழு ஆதரவையும் நல்க ஒரு போதும் பின்நிற்கக்கூடாது.

நான் இந்த அரசாங்கம் பதவியேற்ற காலம்தொடக்கம் பல தலைவர்களை வற்புறுத்திக் கேட்டே வந்திருக்கிறேன். முதன்முதலில் காலஞ்சென்ற யாழ் நகரமேயர் திரு. அல்பிரட் துரையப்பாவையும், கௌரவ அமைச்சர்செல்லையா குமாரசூரியரையும் இதற்கென ஒருதனி அணி உண்டாக்கி எமது மொழி, கலை, கலாச்சாரம் போன்ற பொக்கிஷங்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருந்தேன். ஆனால் அவர்கள் அதைச் செய்ய மறுத்துவிட்டார்கள்.

பின்னர் பல சிங்களத் தலைவர்களை மாவட்ட சபையை அமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டிருந்தேன். அவர்களும் அதைச் செய்யத் தவறிவிட்டார்கள்.

கௌரவ பிரதமமந்திரிஅவர்களுக்கும் இந்த விடயத்தைக் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். அவர் அதைக் கவனிப்பதாக அறிவித்திருந்தார்.

தற்போது கம்யூனிஸ்ட்கட்சி இந்த விடயத்தில் முக்கிய பங்கு எடுக்க முன்வந்துள்ளமை வரவேற்கத்தக்கதாகும.

## விவாத மேடை

தமிழர்கள் தங்களுடைய பொருளாதாரத்தை விருத்தி செய்ய வேண்டும். அதற்கு ஒவ்வொரு மனிதனும் தன்னாலான முயற்சியை செய்ய வேண்டும. இதற்கு வங்கிகளை நன்றாகப் பிரயோசனப்படுத்தலாம். மாகாண பிரதேச சுயாட்சித் தமிழ்ஈழம் ஒன்றே போதுமானது. அது நன்றாக மலரட்டும். தமிழர்கள் இன்புற வாழட்டும். சிரித்தமுகத்துடன் வடபகுதியை செழிப்படையச் செய்யட்டும்.

## வேலரும் மயிலரும்



வேலர்; எங்கடை அபேட்சகருக்கு இளைய பிள்ளைகளிலும் மூத்த பிள்ளைகளில் தான் பற்று அதிகம்?

மயிலர்: 'ஏன்?'

வேலர்: 'அவையளுக்குத்தானே வோட்டுரிமை இருக்கு'

—சுந்தர்

# சங்கநூற் செல்வர்

— இ. பாலசுந்தரம் —
(தமிழ் விரிவுரையாளர், கொழும்பு வளாகம்)

தமிழிலக்கியப் பரப்பிலே கைதேர்ந்து 'சங்கநூற் செல்வர்' எனப் பட்டமும்பெற்று, திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பதிற்றுப் பத்து என்னும் மூன்று நூல்களுக்கும் உரைஎழுதிய அனுபவத்தையும் பின்னணியாகக் கொண்டு பண்டிதமணி அருளம்பலவனார் திருவாசகத்திற்கு ஆய்வுரை எழுதியுள்ளார்கள். இத்தகையபின்னணியில் எழுதப்பட்ட இவ்வுரையில் ஆராய்ச்சித்தெளிவும், விரிவான விளக்கமும் அமைந்து காணப்படுதல் இயல்பே.

சிவபுராணம்முதல் அச்சோப் பதிகம் ஈறுகவுள்ள திருவாசகப் பாடல்களுக்கு எழுதப்பட்ட உரையானது 1402 பக்கங்களிலமைந்து இருபாகங்களாக இடம்பெற்றுள்ளது. முதலாம் பாகம் 1977லும் இரண்டாம் பாகம் 1973-ம் ஆண்டிலும் வெளிவந்து 1973-ம் ஆண்டு சிறந்த வெளியீட்டுக்குரிய சாகித்தியமண்டலப் பரிசையும் இந்நூல் பெற்றது.

அருளம்பலவனார் தம் இலக்கியப்புலமையை ஆய்வுக்குப் பயன்படுத்தி ஒப்பியலடிப் படையில் ஒவ்வொரு பாடலுக்கும் சிறப்புரை கண்டுள்ளனர். இவரது ஆய்வுரை பழைய உரையாசிரியர் பரம்பரையை நினைவூட்டுவதாக அமைகின்றது. மூவர் தேவாரங்களுடன் திருவாசகத்தை ஒப்பிட்டுக் காட்டிச்செல்லும் பாணி ஆய்வாளருக்கு ஆதாரமாகின்றது. சைவசித்தாந்த சாஸ்திரங்கள் கூறும் கருத்துக்களைத் திருவாசக தத்துவத்துடன் ஒப்பிட்டுள்ளார், ஒவ்வொரு திருவாசகப்பாடலும் நுதலிய பொருளைச் சுருக்கமாகக் கூறும் பண்பும் பதிகங்களின் பாடற் பொருளை வகைப்படுத்தியிருக்கும் முறையும் கொண்டுகூட்டிப் பொருள்சாற்றும் மாண்பும் ஆசிரியரின் திறமையைக் குறிப்பிடுகின்றன. வாசகர்களைச் கவரும்வகையிற் பாடங்களிற் பயின்றுவரும் புராணக் கதைகளை விளக்கி எழுதியுள்ளார்

மாணவர்களுக்குப் பயன் படத்தக்கவகையில் எழுதப் பட்டிருக்கும் இவ்வுரையில் ஆங்காங்கு முக்கியமான இலக்கணக் குறிப்புகளையும் யாப்பு விளக்கங்களையும் தந்துள்ளார் ஒவ்வொருபாடற் பகுதிகளுக்கும் எழுதியிருக்கும் முன்னுரையும் நூலைப் பயில்வோருக்குச் சிறந்த பின்னணியாக அமைகின்றன. திருவெம்பாவைபற்றியும் அதனோடு தொடர்புடைய பாவை நோன்பு, தைநீராடல் என்பனபற்றியும் கூறப்படும் சிறப்புரை க. பொ. த. உயர் மாணவர்களுக்குப் பயன்படும்வகையில் அமைந்துள்ளது.

திருவாசக ஆராய்ச்சியுரையைப் பயிலும்போது சங்கநூல்கள் தொடக்கம் பிற்காலத் தனிப்பாடல்கள் வரைக்குமுள்ள இலக்கியங்கள் இந்நூலில் ஆய்வுச் சான்றுகளாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். சிறப்பாக மூவர் தேவாரங்களின்பொழிப்பும் அவைபற்றிய அறிவும் இவ்வுரையின் மூலம் பெற வாய்ப்புண்டு. தமிழர் பண்பாட்டியலாளருக்கும் பயன்படத்தக்கவகையில் மாணிக்கவாசகர் காலத்துத் தமிழ்நாட்டைதம்உரையிலே காட்டியிருக்கிறார். அக்காலத் தலங்கள், கோயில்வழிபாட்டு முறைகள், கிராமிய விளையாட்டுமுறைகள், நாட்டார் பாடல்கள், இசைமுறைகள் ஆகியன்வற்றை ஊகித்து உணரத்தக்க வகையில் இந்நூல் காணப்படுகிறது. பக்தி இலக்கிய நெறியும், சைவசித்தாந்தக்கருத்துக்களும் இந்நூலில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

[இன்று பண்டிதமணியின் நினைவுதினமாகும்].

# "மண்டைதீவின் சுகாதாரத்தை கெடுக்காதீர்"

வண்ணார்பண்ணை, வியா,

யாழ்ப்பாண மாநகரப் பகுதியில் உள்ள வாளிமல கூடங்களில் யாழ். மாநகரசபையால் சேகரிக்கப்படும் மலத்தை லொறிகள் மூலம் கொண்டு சென்று மண்டைதீவில் உள்ள தரிசுநிலத்தில் புதைப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையை உடன் தடுத்துநிறுத்துமாறு மண்டைதீவில்உள்ள பொதுஸ்தாபனங்கள் பல யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருக்குக் கடிதங்களை அனுப்பியுள்ளன.

இந்த ஆட்சேபனைக் கடிதங்களின் பிரதிகள் யாழ். மாநகர ஆணையாளருக்கும், விசேஷ ஆணையாளருக்கும் அனுப்பப் பட்டுள்ளன.

இந்த ஆட்சேபனையை மீறி நடவடிக்கை எடுக்கும்பட்சத்தில் இதைத் தீவிரமாக எதிர்ப்பதற்கும் இக்கிராம மக்கள் திடசங்கற்பம் பூண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மண்டைதீவு மறுமலர்ச்சி இயக்கம், மண்டைதீவு ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம், மண்டைதீவு வள்ளுவன் சனசமூக நிலையம், தீவுப்பகுதி அபிவிருத்திச் சபை போன்ற பலஸ்தாபனங்கள் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. கடிதத்தில் கூறப் பட்டுள்ளதாவது:

'இக்கிராமத்தின் சுகாதாரத்திற்குப்பங்கமான நடவடிக்கையாக இத்திட்டம் அமைந்துள்ளது அபிவிருத்தியடைந்து வரும் இக்கிராமத்தின் சுகாதாரத்தை இத்திட்டம் பாதிக்கும்.

''இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், பிரதான வீதி, பிள்ளையார் கோவில் விவசாய நிலங்கள் போன்ற பொதுமக்கள் நடமாடும் இடத்தை இத்திட்டத்திற்குத் தெரிந்திருப்பது இக்கிராம மக்களை அவமதிப்பதாகும், மாநகர சபையுடன் சேராத ஒரு கிராமத்தில் இப்பகுதி மக்களின் விருப்பத்திற்குமாறாக மலம்புதைப்பதை உடன் நிறுத்தவேண்டும்''

(அ)

## செருப்பை விட்டு திருடன் ஓட்டம்

உடுப்பிட்டி, வெள்ளி,

இரவுவேளை வீடொன்றினுள் புகுந்து திருட முயன்றவர் தனது செருப்பைப் பறிகொடுத்துவிட்டு வெறுங்காலுடன் தப்பியோடிய சுவையான சம்பவம் கரவெட்டியில் நிகழ்ந்துள்ளது.

முன்னாள் உதவிப் பொலிஸ் அதிபர் ஒருவரின் வீட்டில் திருடப்புகுந்தவருக்கே தனது பாதணியை இழக்கும் அனுபவம் ஏற்பட்டது.

இரவில் ஆளரவம் கேட்டுக் கண்விழித்துக் கொண்ட முன்னாள் உதவிப் பொலிஸ் அதிபரின் மனைவி திருடனைப்பிடிக்க முனைந்தபோது திருடன் தான் அணிந்திருந்த செருப்பையும் போட்டுவிட்டு தப்பினேம் பிழைத்தோமென்று ஓட்டம் பிடித்தான்.

(அ)

## எழுவைதீவு சைவபரிபாலன சபை

யாழ்ப்பாணம், வெள்ளி

எழுவைதீவு சைவபரிபாலன சபை நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்: பொதுத்தலைவர்: ஐ. ஆ. இராமசாமி, பொதுச் செயலாளர்: ஆ. தம்பிரத்தினம், பொதுப்பொருளாளர்: செ. மா. பரமலிங்கம். முகவர்: தி. கிருஷ்ணபிள்ளை, எண்பரிசோதகர்: எஸ். கே. காசிலிங்கம், செயற்குழு உறுப்பினர்கள்: சோ. சமுத்திரரெத்தினம், க. சிவராசா, செல்வி சோ. இந்திராதேவி, ச. தம்பு, வ. வேலாயுதன், சி. நடராசா, க. திலகசுந்தரம்.

வெளியூர்க்கிளை: தலைவர்: ஏ. தர்மலிங்கம், உபதலைவர்: அ. தியாகராசா, செயலாளர்: ஐ. ஆ. இராமசுவாமி, உபசெயலாளர்: பொ. சுந்தரலிங்கம். செயற்குழு: சி. குமாரசாமி, கி. சுந்தரலிங்கம், வீ. சிவசம்பு, செல்வி சோ. இந்திராதேவி.

உள்ளூர்க் கிளை: தலைவர்: க. அருணாசலம், செயலாளர்: சோ. சமுத்திரரத்தினம், இணைப்பொருளாளர்கள்: ச. தனநாயகம், ஆ. இராசரத்தினம், உபதலைவர்: ஐ கனகசபை, உபசெயலாளர் சி. மகாதேவன், செயற்குழு: ஆ. வே. நடராசா, ச. திருநாவுக்கரசு, ச. தம்பு.

(கெ-அ)

## புதியபஸ்கள் சேவையில்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்.குடாநாட்டில் உள்ள இ.போ. ச. டிப்போக்களுக்கு பல புதிய பஸ்வண்டிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கரைநகர் ஆகிய இ. போ. ச. டிப்போக்களுக்கு ''அசோக் லேலண்ட்'' என்ற ரகத்தைச் சேர்ந்த பஸ்வண்டிகள் சுமார் 20 அனுப்பி வைக்கப்பட்டதையடுத்து அவை சேவையிலீடுபடுத்தப் படுகின்றன.

(நெல்.தி.உ)

# "உரிமையை வென்றெடுக்க ஒன்றுபட்டுள்ளோம்"

## செல்வா அஞ்சலிக் கூட்டத்தில் வி.பி.

சுன்னாகம், வியா.

"மூதறிஞர் தந்தை செல்வாவுக்கும் எனக்குமுள்ள தொடர்புகள் இலட்சிய அடிப்படையில் அமைந்தவை. எனது மூச்சு உள்ளவரை தமிழ் ஈழத்திற்காகப் போராடியே தீருவேன். தந்தை செல்வாவை காணவிழைந்த தமிழ் ஈழத்தைப் பெற்று அவரின் ஆத்ம சாந்திக்கு உழைப்போம்"

மல்லாகத்தில் திரு. லோறன்ஸ் உதயராசா தலைமையில் நடைபெற்ற தந்தை செல்வா அஞ்சலிக் கூட்டத்தில் திரு. வி. பொன்னம்பலம் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மல்லாகம், சுவாமி ஞானப்பிரகாசர் மன்றத்தினர் இக்கூட்டத்தை நடத்தினர். திரு.வி. பொன்னம்பலம் தொடர்ந்து கூறியதாவது.

"1948-ம் ஆண்டு எனது 17-வது வயதில் தந்தை செல்வாவுக்காக வாக்கு சேகரித்தவன் நான். அவரின் நல்லாசியும் சான்றிதழும் பெற்று 1949ம் வருடம் இந்தியா சென்று பல்கலைக்கழகத்தில் படித்த வேளையில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தேன். 1952-ம் வருடம் ஊர் திரும்பிய நான், கம்யூனிஸ்ட் கட்சிக்காரனாக இருந்த போதும், தந்தை செல்வா தமிழரசுக்கட்சி சார்பாக போட்டியிட்ட வேளையிலும் தந்தை செல்வாவுக்காக பிரசாரம் செய்தேன். எனது 26-வது வயதில் ஏழை—பணக்காரன் என்ற பேதமைகள் விட்டகலவும், பொதுவுடைமைத் தத்துவம் பரப்பவும், 1956ம் ஆண்டு எனது கட்சிக்கொள்கையை மக்கள் மத்தியில் பரப்புவதற்காகவும் தேர்தலில் போட்டியிட்டேன். ஆனால் தந்தையிடம் தனிப்பட்ட கோபம் காரணமாகவோ வெற்றி எனக்குக் கிடைக்க வேண்டுமென்றோ போட்டியிடவில்லை.



### பணத்தை பெரிதாக மதிக்கவில்லை

"1956ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சிசார்பாகபோட்டியிட்ட நடேசபிள்ளை அவர்கள்என்னைப்போட்டியில்நின்று விலகும் படியும் தந்தை செல்வாவை தோற்கடிக்க உதவும் படியும் அதற்கு சன்மானமாக பத்தாயிரம் ரூபாய் தரலாம் எனவும் என்முன் பணத்தை வைத்து பேரம் பேசினார்கள். சில பெரியார்கள் தந்தை செல்வாவை தோற்கடிப்பதை நான விரும்பவில்லை என்றுகூறி மறுத்துவிட்டேன். நான் எனதுஇலட்சியத்திற்காக தேர்தலில் நின்றேன். உலகத்தில் தோற்றவர்கள் வரிசையில் எனக்கு தனிமதிப்புண்டு. காரணம் நேர்மையான ஒரு அரசியல் தலைவரிடம் தான் நான் தோற்றேன்.

"20 அம்சக் கோரிக்கையை எங்களதுகுழு பிரதமரிடம் சமர்ப்பிக்கும் போதும்,தந்தை செல்வாவை தலைமையாகக் கொண்ட தமிழர் கூட்டணியையும் அழைத்துப் பேச்சு வார்த்தை நடத்துங்கள் என்றுதான் கேட்டேன். அப்போது அவர்கள் அழைத்தால் பேசுவேன் என்றார்கள். அதற்கு நாங்கள், நீங்கள் அழைத்தால் தமிழ்த் தலைவர்கள் வருவார்கள் என்று கூறினோம். ஒரு கட்டத்தில் அமைச்சர் பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்கா, தமிழர் பிரச்னை தீர்ப்பதால் தமிழர்களுக்கு என்ன லாபம் என்று கேட்டார். நான் அவரிடம் தமிழர் பிரச்னைகளை தீர்ப்பதால் சிங்கள மக்களுக்கு என்ன நட்டம் என்று சூடாகக் கேட்டேன்.

### சலுகை பதவி பெரிதல்ல

"1942ம் வருடமே இலங்கையில் வாழுகின்ற இரு இனங்களும் சுயநிர்ணய உரிமையுடன் தனித்துவத்துடன் வாழவேண்டுமென கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக்கொண்டது. குறிப்பிடத் தக்கது. நான் என்றைக்கும் தந்தை செல்வாவை மதிக்கத்தவறியதில்லை. சிலர் நினைக்கலாம். நான் பதவிக்காக, அல்லது சில சலுகைகளுக்காக தமிழர் கூட்டணியை அண்டிநிற்கிறேன்என்றுஆனல் இது எனது சொந்த முடிவல்ல கட்சியின் முடிவு இது. எனது 30 வருட அரசியலில் என்றும் தமிழ் மக்களின் உரிமைக்காக நான் எனது கட்சியின் தலைவர்களிடமும் கட்சியின் மட்டத்திலும் வலியுறுத்தத் தவறியது கிடையாது. பிரதேச சுயாட்சிமூலம் தமிழர் தங்களை தாங்களே ஆளவேண்டுமென சோவியத் ரஷ்யாவை உதாரணம் காட்டி நான் கட்சியுடன் போராடி வந்திருக்கின்றேன். அதன்பலன்தான் இன்று கட்சியின் அனுமதியுடன்நான் தமிழர் கூட்டணியுடன் கைகோர்த்து நின்று எமதுஉரிமையை வென்றெடுக்க தயாராக ஒன்றுபட்டுள்ளோம்"

### ஒற்றுமைகாத்த ஒரேதலைவன்

உடுவில் எம். பி. திரு. வி. தருமலிங்கம் பேசுகையில், இதுவரை தோன்றிய தமிழ்த்தலைவர்களில் தமிழர் ஒற்றுமைக்காகப் பாடுபட்ட தலைவர் தந்தை செல்வாவே தவிர வேறு எந்த தமிழ்த் தலைவர்களும் அல்ல. சிங்கள ஆட்சியாளரால் நாம் பலவருடம் ஒப்பந்தங்கள் என்றும், பேச்சு வார்த்தை என்றும் சொல்லி ஏமாற்றப்பட்டதன் நிமித்தம் தந்தை செல்வா, இனிமேல் தமிழ்மக்களுக்கு தமிழ் ஈழத்தைத்தவிர வேறு முடிபு இல்லை என்று தீர்மானித்தார். அவர் தமிழ் ஈழத்தைப்பெற ஒற்றுமையை ஏற்படுத்தினர். அவரின் இலட்சியக்கனவு நிறைவேற நாம் எல்லோரும் பங்காளராகச் சேர்ந்து உழைத்து தமிழ் ஈழத்தைப் பெறுவது தான் நாம் அவருக்குச் செலுத்தும் நன்றிக்கடன்' என்று கூறினர்.

## யாழ். வளாகத்தில் இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழறிஞரும், சைவசித்தாந்தப் புலவரும், வித்தகப் பத்திரிகை ஆசிரியருமான தென்கோவை ச. கந்தையாபிள்ளையின் உருவப் படம் இன்று வளாக நூல்நிலையத்தில் வளாகத் தலைவர் பேராசிரியர் கலாநிதி க. கைலாசபதியால் திரைநீக்கஞ் செய்துவைக்கப்படுகின்றது. இவ்வைபவத்தில் கலாநிதி அ. சண்முகதாஸ், நூலகர் ஆர். எஸ். தம்பையா ஆகியோர் உரை நிகழ்த்துவர். (கு-அ)

## விற்பனவு திணைக்களக்கிளை

யாழ்ப்பாணம், வெள்ளி

'மக்கள் நலன் கருதியே விற்பனவு திணைக்கள கிளைகள் நிறுவப்படுகின்றன என்று யாழ். அரசாங்க அதிபர் திரு. டபிள்யு. ஏ. எல். விஜயபால ஊர்காவற்றுறையில் நடைபெற்ற அரசினர் விற்பனவுத் திணைக்களக் கிளைத் திறப்பு விழாவில் பேசுகையில் கூறினர்.

இவ்விழாவில் பண்டிதர் கா. பொ. இரத்தினம், ஊர்காவற்றுறை பட்டின சபைத் தலைவர் திரு எம். இம்மானுவல், வேலணை உதவிஅரசாங்க அதிபர் திரு. சுப்பிரமணியம் ஆகியோரும் பேசினர். (கெ-உ)

## 'உலக நாடுகளில்

# நமது நாட்டில்தான் சமயத்துக்கு முக்கியத்துவம் அளித்துள்ளோம்"

## பிரதம கல்வி அதிகாரி பெருமிதம்

இமையாணன், வியா.

"உலகநாடுகளில் நமதுநாட்டில்தான் சமயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட துரிதகால-இந்துசமய ஆசிரியர்களின் பயிற்சித் திட்ட வைபவத்தின்போது கல்வி அமைச்சின் பிரதம கல்வி அதிகாரி திரு.எச். எஸ்.எஸ். நிசங்கா பேசுகையில் கூறினர்.

### வரலாற்று முக்கியத்துவம்

"இந்த வைபவம் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தது" என்று கூறிய அவர்; 1920ல், கிறிஸ்தவம் மட்டும் படிப்பிக்கப்படவேண்டும், மற்றச் சமயங்கள் கற்பிக்கப்படக் கூடாது என்றிருந்தது. 1930 லும் 1939 லும் நிறைவேற்றப்பட்ட சட்டம் 'கிறீஸ்தவம் மட்டுமே' என்றிருந்தது. 1949ல் பெற்றோருடைய சமயத்தை கற்பிக்க அனுமதி கொடுக்கப்பட்டது. உலகநாடுகளில் நேபாளத்திலும் கூட சமயத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. பாரதம் போன்ற நாடுகளிலும், பாடசாலைகளில் கூட சமயம் கற்பிக்கப்படவில்லை. ஆபிரிக்கா, தென் அமெரிக்கா போன்ற நாடுகளில் இந்து சமயத்தவர்கள் இருந்தும்,அங்கும் கற்பிக்கப்பட வில்லை" என்று கூறினர்.

"நம் நாட்டில் இன்றய கல்விக் கொள்கையின்படி சமயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. முதலாம் வகுப்புத் தொடக்கம் ஒசபதா வதுவரை சமயபாடம் கட்டாய பாடமாக உள்ளது. முன்பு பதினைந்து மாணவர்கள் இருந்தால்தான் சமய பாடம் கற்பிக்கலாம் என்ற நிலை இருந்தது. ஆனல் இன்று ஒரு மாணவர் இருந்தாலும் கற்பிக்க வேண்டும். இந்தக் 'கொள்கையை' நிறைவேற்ற உங்களுடைய முழு ஆதரவையும் நாடுகின்றோம். இப்பயிற்சி முடிவடைந்ததும், மேலும் இரண்டு ஆண்டுகால பயிற்சிகள் உட்பட தொடர்ந்து பயிற்சிகள் நடத்தப்படும்" என்றும் கூறினர்.

### ஆசிரியர் மூலம் சமயம் பரவவேண்டும்

இந்து சமய ஆசிரியர்களின் பயிற்சித் திட்டத்தை, இந்து சமய ஆலோசனைக் குழுத்தலைவரும் ஓய்வுபெற்ற நீதியரசருமான திரு வி. சிவசுப்பிரமணியம் சம்பிரதாய முறைப்படி தொடக்கி வைத்தார். அவர் தமது தலைமை உரையில்;

"சைவ சமயத்தில் மாணவர்கள் ஆர்வமும், உற்சாகமும் கொண்டு படிக்கவேண்டும். இதற்கு ஆசிரியர்கள் தெளிவாகவும், எளிய நடையிலும் போதிக்கவேண்டும்" என்றும் கேட்டுக்கொண்டார்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பேசுகையில், 'கல்வியில் மேம்பாடு இருக்கவேண்டுமானல் சமயநம்பிக்கை ஏற்படவேண்டும். சைவ சமயபாடம் கஷ்டமானது என்ற எண்ணம் நீங்கவே இந்தப்பயிற்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றார்.

நல்லை ஆதீன சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் ஆசியுரை வழங்கும்போது "ஆசிரியர்கள் மூலம் சமயம் பரப்பப்படவேண்டும்" என்று கூறினர்.

கல்வி அமைச்சின் தமிழ்ப் பிரிவுப் பணிப்பாளரான திரு. கி. இலட்சுமணஐயர் பேசும்போது 'அறிவுமட்டும்போதாது பயிற்சி முக்கியம் என்றும் சமய ஆசிரியர்களுக்கு பயிற்சி முக்கியம் என்றும் கூறினர்.

இவ்வைபவத்தில், கல்வி அமைச்சின் ஆசிரியர் கிளையின் பிரதம கல்வி அதிகாரி திருமதி நாணயக்காரா, கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலை அதிபர் திரு.கே.ஜெயராசா உட்படப் பலரும் சிறப்புச் சொற்பொழி வாற்றினர்கள்.

# ஹோமியோபதி சங்கம் செல்வாவுக்கு அஞ்சலி

மாவிட்டபுரம், வெள்ளி

'சாதி, சமய, கட்சி,பிரதேச வேறுபாடுகளை மறந்து பதவி ஆசைகளைத் துறந்து ஒற்றுமையாகப் போராட தலைவர்கள் செயல்படுவதே தந்தை செல்வாவுக்குச் செய்யும் கைமாறு'

இவ்வாறு தந்தை செல்வாவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக யாழ்ப்பாணம் விக்ரோறியா வீதியில் நடைபெற்ற ஹானிமன் ஹோமியோபதி சங்கத்தில் உரையாற்றுகையில் டாக்டர் என். விஜயரத்தினம் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசும்போது, 'கால் நூற்றாண்டாகத் தமிழ்மக்களுக்குச் சேவையாற்றியவர் தந்தை செல்வா. அவர் விட்டுச்சென்ற இலட்சியங்களை நாம் ஒவ்வொருவரும் நிறைவேற்ற உழைக்க வேண்டும்' என்றார்.

திரு. எப். ஏ. இராக்க, திரு. எம். எம். இக்பால், திரு. என். மயில்வாகனம், திரு. மார்க்கண்டேர் ஆகியோரும் உரையாற்றினர்கள்.

சங்கத்தின் நடப்புவருடத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டதைத் தொடர்ந்து நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது. போஷகர் டாக்டர் எப். ஏ. ருகல் சித்தியடைந்த வைத்தியர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கினார்.

பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்: டாக்டர் எப். ஏ. ருகல், தலைவர்: டாக்டர் என். விஜயரத்தினம், செயலாளர்: டாக்டர் எம்.எம். இக்பால், இணைப்பொருளாளர்: டாக்டர் க. மார்க்கண்டேயர், டாக்டர் என். முத்துக்குமாரு. (கெ அ)


நியூ பிறில்லியன் கல்வி நிலையம்
(பதிவு இல. 10069)

தமிழ், ஆங்கில, சிங்கள, தட்டெழுத்து, சுருக்கெழுத்து

பகல்நேரம்/விடுமுறை நாட்களில்
நவீன இயந்திரங்கள், திறமையான ஆசிரியர்கள்

வெல்டிங் டிப்ளோமா

வேறு இடங்களில் அரைகுறையாகப் பயின்றும்
காஸ் வெல்டிங்
பயிலாமல் இருப்போரின் வேண்டுகோளுக்கிணங்க
விசேட சலுகை வகுப்புகள்

21-5-77 சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு

பாலன் இரும்புத்தொழிற்சாலையில்

ஆரம்பமாகிறது.
எல்லா நாடுகளிலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய
நற்சான்றிதழ்ப்பத்திரம் வழங்கப்படும்.

விபரங்களுக்கு:

திருத்தணிகை,
284, பலாலி வீதி, முத்திரைச்சந்தை?, யாழ்ப்பாணம்.

வேலை நேரங்களில்;
பாலன் இரும்புத் தொழிற்சாலை,
(சிலோன் தியேட்டர் நிலையத்தின் முன்பாக)
409, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.



வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

ராணி (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். — லதா (இருவேடங்கள்) நடித்த
தினசரி 4 காட்சிகள்

# நாளை நமதே

(ஈஸ்ட்மன் கலர்)
(ஜனத்திரள் அலைமோதுவதால் காட்சி நேரம் குறிப்பிடமுடியாமைக்கு வருந்துகின்றோம்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி ∴ தேவிகா ∴ நாகேஷ் நடித்த

# அன்னை இல்லம்

RIO (Jaffna) Daily 4 Shows
இன்று மட்டும்
KIRK DOUGLAS, RICHARD HARRIS
IN

# HEROES OF TELEMARK

(ரெலிமார்க் நகரத்து மாவீரர்)
இரண்டாவது உலக மகாயுத்தத்தின்போது நாஸி ஜேர்மனிக்கு எதிராக தம் நாட்டின் சுதந்திரத்தைக் காப்பாற்ற - தனித்துவத்தைப் பேணிக்காக்க-நோர்வே நாட்டு மக்கள் நடத்திய வீரமரணப் போராட்டத்தை சித்தரிக்கும் கதை.
(2 தினங்கள் மட்டும்)
From 21-5-77 Carry on Dick

REGAL (JAFFNA)
Daily: 10-30 a. m. 2-30, 4-45, 7-00 & 9-30 p. m.
2ND GROWDED WEEK
ALAN PRICE

# ALFIE DARLING

(Color-adults only)
வயது வந்தவர்களுக்கு மட்டும்

வெலிங்டன் (யாழ். நகர்)
முத்துராமன் ∴ சுஜாதா நடித்த
தினசரி 4 காட்சிகள்

# வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ (யாழ். நகர்) போன்: 7693
விஜயகுமார் — லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45,

# சொர்க்கத்தில் திருமணம்

(கலர்)

# இன்று ஆண்டுவிழா

வேலணை, வெள்ளி.

புங்குடுதீவு பாதகுல நசரேத் சனசமூகநிலையத்தின் 22வது வருடாந்த விழா வித்துவான் பொன், கனகசபை தலைமையில் சனசமூகநிலைய முன்றலில் இன்று நடைபெறவிருக்கின்றது.

பிரதமவிருந்தினராக பண்டிதர் கா. பொ. இரத்தினம் கலந்துகொள்ளவிருக்கின்றார். நிலையக்கொடியை வணபிதா குரூஸ் ஏற்றிவைப்பார். சட்டத்தரணி நேமிநாதன். சர்வோதய அமைப்பாளர் திரு. க. திருநாவுக்கரசு, ஈழத்துச் சிவானந்தன், செல்வி ஞே. ஞேஸ்மாசில்லா, திரு. இ. மார்சலின் ஆகியோர்கள் உட்படப் லர் பேசுவார் (அ)

## வருமான

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நடத்திவருகின்றனர். வரி ஏய்ப்பு, நிகரான விற்பனவு வரி செலுத்தாமை, வருமானச் சொத்து மோசடி ஆகிய குற்றங்களுக்காகத் தங்களின் வேட்டையை ஆரம்பித்துள்ளனர். நேற்றைய தினம் நெல்லியடி, பருத்தித்துறையில் பலர் அகப்பட்டுக்கொண்டது இங்கு குறிப்பிடத்தக்கது. (கெ)

புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 4-30, 7-00, 9-00
Sink or Swim

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
முத்துராமன்
கே. ஆர். விஜயா
கஸ்தூரி விஜயம்

நாகம்ஸ் (சுன்னுகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி-சௌகார்ஜானகி
பாபு

# ஜே. பி. உடல்நிலை:

## கார்ட்டர் கேட்டறிந்தார்

வாஷிங்டன், மே 19

ஜெயப்பிரகாஷ்நாராயணின் உடல் நிலை குறித்து அமெரிக்க ஜனதிபதி திரு. ஜிம்மிகார்ட்டர் தொலைபேசி மூலம் அவரிடமே கேட்டறிந்தார்.

தாம் நலமுடன் இருப்பதாகக் கூறிய திரு. நாராயண், அமெரிக்க மருத்துவமனைக்கும் திரு. கார்ட்டருக்கும் நன்றி தெரிவித்தார்.

பாரதப்பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய்க்குத் தமது வணக்கத்தைத்தெரிவிக்குமாறு திரு. கார்ட்டர் திரு. நாராயணிடம் கேட்டுக்கொண்டார். (உ)

# 6-ல் வேட்புமனு தாக்கல்—

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

டம்பரில் ஸ்ரீ ல. சு. கட்சி அரசியலிலிருந்து வெளியேற்றப்பட்டது. நிலைமை இவ்வாறு இருந்தபோதிலும், போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தமொன்றை உருவாக்க அமைச்சர் மைத்திரி பாலசேனநாயகாவும், அமைச்சர் ரி. பி. இலங்கரத்தினவும் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டுவருகின்றனர்.

## 'குசுகுசு' பேச்சுக்கள்

தேர்தல் பிரச்சாரம் சூடுபிடித்திருக்கும் அதே நேரத்தில், போட்டிதவிர்ப்பு, கூட்டு முன்னணி 'குசுகுசு' பேச்சுக்களும் தலைதூக்கியுள்ளன. தலைநகரிலும், வடக்கிலும், கிழக்கிலுமே உடனடியாக இப்பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன.

ஜூலைமாதம் 21ம் தேதி பொதுத்தேர்தலை நடத்தி ஆகஸ்ட்மாதம்26ம்திகதி —ஒரு மாதம் கழித்து- தேசிய அரசுபேரவையை ஏன் கூட்டவேண்டும்? இவ்வளவு இடைவேளை எதற்கு என்பதுதான் அரசியல் வட்டாரங்களில் உடனடியாக எழுந்த கேள்வி. இந்தப்பெரிய 36 நாள் இடைவெளி அவசியம்தானு என்று அரசியல் அவதானிகள் கேட்கின்றனர்.

## முதல்வேட்பாளர் பட்டியல்

காங்கிரஸ் - தமிழரசு-இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் இணைந்ததமிழர் விடுதலைக்கூட்டணி தனது வேட்பாளர்பட்டியலைகடந்தவாரமேவெளியிட்டுவிட்டது. வேட்பாளர் பட்டியலை முதலில் வெளியிட்ட கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணிதான் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இக்கூட்டணி மொத்தம் 25 தொகுதிகளில் போட்டியிடுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் புதிய சோஷலிஸ ஐக்கிய முன்னணி ஆகியவற்றின் வேட்பாளர் பட்டியல் அடுத்த வாரம் வெளிவரும்.

## புதிய கட்சிகள்; சுயேச்சை முகங்கள்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் புதிய புதிய பெயரில் கட்சிகள் போட்டியிடும் அறிகுறிகள் தென்படுகின்றன வடக்கே, ஏற்கனவே சில புதுக் கட்சிகள் தொடங்கப்பட்டுவிட்டன. அதே நேரத்தில் சுயேச்சையாகப் போட்டியிடவும் பலர் 'வரிந்துகட்டி'க் கொண்டு முன்வந்திருக்கின்றனர். இவர்களிற் சிலர் கட்சி சார்பில் போட்டியிட முன்வந்து, 'நியமனம்' கிடைக்காதவர்கள்.

## அரச பதவிகள் வகித்தவர்கள்

தேர்தலில் போட்டியிடும் பொருட்டுச் சிலர் தங்கள் பதவிகளை ராஜிஞமாச்செய்துவிட்டனர். வேறு சிலர் ராஜிஞமாச் செய்யவுள்ளனர். சணல் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. டேவிட் ஹபன்கமபியகமத்தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பாகப் போட்டியிடும்பொருட்டு ராஜிஞமாச்செய்துவிட்டார். சலுசலாத் தலைவர் திரு. டக்ளஸ் பெரேரா பொரளைத் தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பாகப் போட்டியிடும் பொருட்டு ராஜிஞமாச் செய்திருக்கிறார். கண்டி அரசாங்க அதிபர் ஏற்கனவே தம்து பதவியை ராஜிஞமாச்செய்துவிட்டார். இவர்கள் தவிரப் பல்வேறு அரச கூட்டுத்தாபனங்களைச் சேர்ந்தவர்கள் சிலரும் வேறு சிலருந் தங்களின் அரச பதவிகளை அடுத்த வாரம் ராஜிஞமாச் செய்யவிருக்கின்றனர்.

தற்போது லண்டனில் சிகிச்சைபெற்றுவரும் நிதிஅமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, அடுத்த மாதம் முதல் வாரத்தில் தாயகம் திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# இறுதி—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் காலை இணுவிலில் சைக்கிளில் வந்த இரு இளைஞர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டது வாசகர்கள் அறிந்ததே.

இவர்களிருவரின் பூதவுடல் இன்று பிற்பகல் 3 மணிக்கு சுன்னுகம் பொலிஸ் நிலையத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும். இறுதியாத்திரை 5 மணிக்கு பூரண பொலிஸ் மரியாதையுடன் சுன்னுகத்திலிருந்து புறப்பட்டு காரைக்காடு மயானத்தில் தகனம் நடைபெறும், யாழ். மாவட்ட பொலிஸ் அதிபர் திரு. ஏ. எஸ். செனிவிரத்னவும் இறுதி அஞ்சலியில் கலந்து கொள்வார்.

## எவரும் கைதாகவில்லை

இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்களும் சுட்டுக்கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை எவரும் கைது செய்யப்படவில்லை. மூன்று பெண்கள் உட்பட ஐவர் தொடர்ந்து பொலிசாரினல் விசாரணைசெய்யப்பட்டு வருகின்றனர்—

# நாட்டுக்கூத்துப் பயிற்சி

அரியாலை, வியாழன்

யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியின் கலை கலாச்சார சங்க மாணவரிடையே நாட்டுக் கூத்துக்கலையை வளர்க்கும் முகமாக ஒரு நாட்டுக்கூத்தை பயிற்றி அரங்கேற்ற நடவடிக்கை எடுத்துவருகிறது.

கலை கலாச்சார சங்கத்தலைவர் திரு. மயில்வாகனம் இதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார். (அ)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன், உஷா நந்தினி, சௌகார் ஜானகி
(இரு வேடங்களில்)
விஜயவேல் பிலிம்ஸாரின்

# மனிதனும்தெய்வமாகலாம்

(ஈட்ஸ்மன் கலர்)

"திருவருள்" புரியும் பக்திரசமான 2-வது வாரம்!
வெற்றிவேல்! வீரவேல்! சக்திவேல்! இது ஞானவேல்!
யாவும் நிறைந்த தங்கவேல்! வருக! வருக!
நீமயிலேறி வருக!



திருவருளை தேடாத நெஞ்சென்ன நெஞ்சோ
திருவருளை காணுத கண்ணென்ன கண்ணே

ராஜா (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஏ. வி. எம். ராஜன்
கிருபானந்தவாரியர், நாகேஷ்,
சுந்தரராஜன், நடித்த
தேவரின்

# திருவருள்

டைரக்ஷன்: ஆர். தியாகராஜன்
(ஈஸ்ட்மன் கலர்)

108-வது வெற்றித் தினம்!
மனோகரா (யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர் • ராதாசலூஜா
வீரப்பா • நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த

# இதயக்கனி

ஈழநாடு
The EELANADU

## "ஒற்றுமையை சிதைப்பவர்களை தமிழ்மக்கள் புறக்கணிப்பர்"

### சபா. செந்துராசா கூறுகிறார்

யாழ்ப்பாணம், வெள்ளி

'நாம் தமிழரசு - தமிழ்க்காங்கிரஸ்' என்ற கொடிகளின்கீழ் கடந்த தேர்தலில் நின்றோம். ஆனால் இம்முறை ஒரே இயக்கமாக தமிழனைத் தமிழன் ஆள வைக்கும் விடுதலை இயக்கமாக இங்கு நிற்கின்றோம். இந்நிலையில் யாராயிருந்தாலும் இனித் தமிழினஒற்றுமையைச் சிதைப்பார்களாயின் அவர்களைத் தமிழ்மக்கள் புறக்கணிப்பார்கள்.

இவ்வாறு தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணிப் பிரமுகர்களில் ஒருவரான திரு. சபா. செந்துராசா குருநகர்விடுதலைக் கூட்டணிக் கிளைத் திறப்பு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது கிளை நேற்று முன்தினம்மாலை குருநகர் சனசமூக நிலையத்திற்கு முன்னால் தமிழ் இளைஞர் பேரவை உறுப்பினரும் சட்டமாணவனுமான திரு. . எம். அலோசியசால் திறந்துவைக்கப்பட்டது. இவ் வைபவத்துக்கு எம். அலோசியஸே தலைமைதாங்கினார்.

திரு. அலோசியஸ் பேசியதாவது:

'அரசியல்வாதிவேறு தேசியவாதிவேறு. வருங்காலத்தைத் திட்டமிட்டு மக்களை நடாத்துபவனே தேசியவாதி. தந்தை செல்வா ஒரு தேசியவாதி. அவரது பாசறையில் வளர்ந்த நாம் சாதி சமய பேதங்களுக்கு உட்படாது தனிப்பட்ட நன்மைகளைக் கருதாது தமிழ்மக்களுக்குச் சேவைசெய்யவேண்டும்.

நான் குருநகரில் தந்தை செல்வாவின் தமிழ்க் கொடியின்கீழ் தமிழரசைச் சார்ந்து நின்று உழைத்தபோது எங்களைப்பார்த்துச் சிரித்தவர்கள் இன்று தமிழனுக்குத் தனிநாடு வேண்டுமென்பதை உணர்ந்துவிட்டார்கள். எனவே விடுதலை இயக்கத்திலிருக்கும் நாம் ஆளைப்பார்க்காமல் கொள்கையே முக்கியம் எனபதை உணர்ந்து எமது இயக்கத்தின் அபேட்சகராக நிறுத்தப்பட்டுள்ள சட்டத்தரணி யோகேஸ்வரனையே ஆதரித்து வாக்களிக்க வேண்டும்.

தமிழ் இளைஞர் பேரவைப் பிரமுகர் திரு. எஸ். கே. மகேந்திரன் பேசுகையில் கூறியதாவது தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் பலர் அபேட்சகராக நிற்க விரும்பி மனுச்செய்தனர், இது உரிமையோடு கோரப்பட்டது. ஆனால்அபேட்சகர் நியமனம் முடிந்ததும் தங்கள் கடமையை உணர்ந்து தமது இயக்கத்திற்காக உழைக்கப் புறப்பட்டுவிட்டனர். இவ் வகையில் திரு. அலோசியஸ் முழுத்தமிழ் ஈழத்திற்கும் சிறந்த முன்மாதிரியாகத் திகழ்கின்றார். அடக்கிஒடுக்கப்பட்ட நாம் ஒற்றுமை உணர்வுடன் இயங்கினால் மட்டுமே தனிநாட்டை அடைய முடியும். பங்களாதேஷில் அவாமிலீக்கின் 168 அபேட்சகரில் 167 பேரை பங்களாதேச மக்கள் தெரிவு செய்து முழு உலகிற்கும் தங்கள் நிலையைத் தெளிவாக்கினார்கள். இதனை நாம் சிந்திக்க வேண்டும். (கி அ)

# அமிரையும் யோகேஸையும் கைதுசெய்ய இருந்தனராம்

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழர் விடுதலைக்கூட்டணி செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கத்தையும், சட்டத்தரணி யோகேஸ்வரனையும் கைது செய்ய இரகசியப்பொலிசார் திட்டமிட்டனராம். இத்தகவலை கிறைமீண்ட வண்ணை ஆனந்தன் குருநகர் விடுதலைக் கூட்டணிக் கிளைத் திறப்பு விழாவில் வெளியிட்டார்.

அவர் கூறியதாவது:

''படுத்த படுக்கையிலிருந்த என்னை இயந்திரத்துப்பாக்கிகளுடன் வந்த பொலிசார் கைதுசெய்து யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். அச்சமயம் என்னைப் பார்க்கவந்த வண்ணார்பண்ணை இளைஞர்களைப் பொலிசார் அடித்துத் துன்புறுத்தினர். இச்சமயத்தில் துணிந்து என்னைப் பார்க்க வந்தது ஒரேஒரு சிவலை இளைஞர் மட்டுமே. அவர்தான் யாழ்ப்பாணத் தொகுதி வேட்பாளர் யோகேஸ்வரன். மறுநாள் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டேன். அங்கு நாலாவது மாடியில் ஒரு மூலையில் என்னை அடித்துத் துன்புறுத்துகையில், மறுமூலையில் தட்டச்சு இயந்திரத்தில், இருவரைக் கைதுசெய்வதற்கான தடுப்புக்காவல் பத்திரங்களை பொறித்துக் கொண்டிருந்தார்கள். எனக்கு அடியினால் ஏற்பட்ட வேதனையைவிட இங்கு இயங்க வேண்டிய இருவரை இழுத்து வரப்போகிறார்களே என்று ஏற்பட்ட வேதனை பெரிதாக இருந்தது. அச்சமயம் அங்கு வந்த அதிகாரி, அமிர்தலிங்கத்தையும் சட்டத்தரணி யோகேஸ்வரனையும் கைது செய்யும் தடுப்புக்காவல் உத்தரவு அடிக்கப்படுகிறது. இனி உங்கள் தமிழ்நாட்டுப்போராட்டம் முடிந்துவிடும் என்று சொன்னார். ஆயினும் ஏதோ ஆண்டவன் அருளால் அவர்கள் இவர்களை கைதுசெய்யாது விட்டுவிட்டார்கள்'' (கி-அ)

## பிரசாரம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணி தனது தேர்தல் பிரசாரத்தை நேற்று முன்தினம் குருநகரில் ஆரம்பித்தது.

குருநகரில் முதலாவது தேர்தல் காரியாலயம் யாழ். வேட்பாளர் திரு. வி. யோகேஸ்வரனுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்யும் வகையில் திறக்கப்பட்டது. (கி- உ)

## திடீர் பணக்காரர் கைது!

கொழும்பு, வியாழன்

திடீர் பணக்காரர் ஒருவர் முகத்துவாரம் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்!

இச் சம்பவம் பற்றிய விபரம் பின்வருமாறு: முகத்துவாரம் பொலிஸ் சார்ஜன்ட் பிள்ளைக்கு 'ராஜி' என்று அழைக்கப்படும் மிக ஏழ்மை நிலையில் உள்ள நபர் ஒருவர் திடீர் பணக்காரராகி விட்டார் என்ற தகவல் ஒன்று கிடைத்தது.

இதனையடுத்து அவரை சார்ஜன்ட் பிள்ளை சந்தேகத்தின் மீது கைதுசெய்து விசாரணைக்குட்படுத்தினார்.

பொல்காவலையில் உள்ள மதுபான நிலையம் ஒன்றில் இருந்து கைக்கடிகாரங்கள், 6000 ரூபா ரொக்கப்பணம் என்பன கொள்ளையடிக்கப்பட்ட சம்பவத்திற்கும் இவருக்கும் தொடர்புண்டு என்று விசாரணையில் தெரிய வந்ததாம்.

பிரஸ்தாப நபரிடமிருந்து கைக்கடிகாரம், ஆயிரக்கணக்கான ரூபா பணம் என்பன கைப்பற்றப்பட்டன.

இக்கொள்ளை தொடர்பாக வேலு என்பவரும் கைது செய்யப்பட்டுள்ளார். மற்றொரு சந்தேக நபர் தேடப்படுகிறார்) (உ

## இந்த பஸ்களில் பொதிகளை ஏற்ற முடியாது

யாழ்ப்பாணம், வெள்ளி.

தற்போது யாழ்ப்பாணம் பருத்தித்துறை, காரைநகர் டிப்போக்களில் சேவையில் ஈடுபடுத்தப்படும் அசோக் லெயிலாண்ட் பஸ்களில், மற்ற பஸ் வண்டிகளைப்போல பொதிகள் ஏற்றப்படமாட்டாது. இந்த பஸ்கள், பிரயாணிகள் பிரயாணம்செய்வதற்கமைய, இருப்பதால் பொதிகளை ஏற்றுவது கஷ்டமாக இருப்பதாகவும் இதனைப் பிரயாணிகள் உணர வேண்டும் என்றும் இ. போ. ச. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (தெ)

### காரைநகர் டிப்போ:

## இ. போ. ச. ஊழியர் வேலைநிறுத்தம் முடிந்தது

யாழ்ப்பாணம், வெள்ளி

காரைநகர் இ. போ. ச ஊழியர்களின்வேலைநிறுத்தம்நேற்று முடிவடைந்தது.

இம்மாதம் 16-ம் திகதி அதிகாலை ஆரம்பமான இவ் வேலைநிறுத்தம் நான்கு நாட்களாகத் தொடர்ந்து நடை பெற்று இ. போ. ச. உயர்அதிகாரிகளுக்கும் தொழிலாளர்களுக்கும், பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று நடை பெற்ற பேச்சுவார்த்தைகளில் இணக்கம் காணப்பட்டதனையடுத்து கைவிடப் பட்டதாகக் கடசியாகக் கிடைத்த தகவல் கூறுகிறது. (உ)

## எவரும் விலகவில்லையாம்

நெல்லியடி, வியாழன்

பருத்தித்துறைத் தொகுதி தமிழ்இளைஞர் பேரவையிலிருந்து எவரும் விலகவில்லையென பருத்தித்துறைத் தொகுதி தமிழ் இளைஞர் பேரவைச் செயலாளர் திரு. பாலகிருஷ்ணன் அறிவித்துள்ளார். (அ)

## அருளம்பலத்தின்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

கொடும்பாவியை இளைஞர்கள் சிலர் தூக்கிச் செல்ல ஊர்வலத்தின் முன்னே வேறு சில இளைஞர்கள் சுலோக அட்டைகளை தாங்கிய வண்ணம் பலவித சுலோகங்களைக் கோஷித்துக் கொண்டு சென்றனர்.

மயானத்தில் புறப்பான இடம் ஒன்றில் வைத்து அக் கொடும்பாவி எரிக்கப்பட்டது. (கு-இ)

## 18 பேருக்கு......

(1-ம் பக்கம் பார்க்க)

18 பேரும் இம்மாதம் 31ம் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

கம்பளை மாஜிஸ்ரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோதே இவர்கள் றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

டெல்டாவில் 13 லயன்கள் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட 18 பேரைத்தவிர மேலும் 6 பேரை பொலிசார் தேடி வருகின்றனர் என்று கண்டி பொலிஸ் அதிபர் திரு. எஸ். சண்முகம் தெரிவித்தார்.

காவலில் உள்ளவர்களில் ஒருவர் கம்பளை எம். பியின் ஆதரவாளர் என்றும் இன்னும் ஒருவர் தோட்ட மேற்பார்வையாளர் என்றும் திரு. சண்முகம் தெரிவித்தார். (ம-இ)

## துரையப்பா...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

முன் அந்நபர்மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும என்று அரசு சட்டத்தரணி தெரிவித்தார்.

இதையடுத்து இம்மனு மீதான தீர்ப்பு வழங்குவதை நீதிபதி இன்றுவரை ஒத்தி வைத்தார்.

நேற்று இந்நபர் நீதிமன்றத்திற்கு அழைத்துவரப்படவில்லை.

### மீண்டும் கைதாகலாம்

துரையப்பா கொலைவழக்கு தொடர்பாக கைது செய்யப்பட்டு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாத 6-வது சந்தேகநபர் இன்று விடுதலை செய்யப்பட்டு கொள்ளைக் குற்றச்சாட்டின்பேரில் மீண்டும் கைதாகலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது. (ம இ)

அரசாங்கத்திற்காக
யாழ். அரசாங்க அதிபரால்
தேர்ந்தெடுக்கப்பட்ட சில மாணவர்களுக்கு விசேஷ
வெல்டிங் பயிற்சி
கொடுப்பதற்கென வடமாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒரே
தொழிற் பயிற்சி ஸ்தாபனம் இதுவே!
எமது பயிற்சி முறையின் சிறப்பை இது விளக்காவிடில்
கனடா, பிரித்தன், ஜெர்மனி, பிரான்ஸ், சவுதி அரேபியா,
ஓம்மான், டுபாய், சிங்கப்பூர், இந்தோனீஷியா
போன்ற நாடுகளில் வெல்டிங் வேலை செய்யும் எமது பழைய மாணவர்களைக் கேளுங்கள். அவர்களின் விலாசங்களை எமது நிலையத்தில் பெறலாம்.
வெல்டிங், வயறிங், ரேடியோ பயிற்சிகளுக்கு
இலங்கையில் பிரபலமான ஸ்தாபனம்,
National Institute of Engineering Technology
மைற் மண்டபம்
128 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
பணவசதி குறைந்தோருக்கு விசேஷ சலுகைகள் உண்டு.
6232

## மரண அறிவித்தல்

### விசாலாட்சி அம்மா

உடுவில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில் பிரதம குருவும் சொந்தக்காரருமாகிய காலஞ்சென்ற பிரமஸ்ரீ ச. சிவகடாட்சக்குருக்களின் அன்பு மனைவி விசாலாட்சி அம்மா அவர்கள் காலமாகிவிட்டார்கள். இவர் ஜோ. ஞானப்பூங்கோதை, முத்துச்சாமி சர்மா, பாலசுப்பிரமணியசர்மா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நாகம்மா, கார்த்திகேய ஐயர், பொன்னம்மா ஆகியோரின் சகோதரியும், கா. ஸ்ரீநிவாச ஐயர், சி. ஜோதீந்திரக்குருக்கள் ஆகியோரின் அன்பு மாமியாரும், மேனகிரீஸ்வரன், மீனலோசனு. சிகிவாகனன், கானசரஸ்வதி, ஹிமசுதா ஆகியோரின் பேத்தியும், மீனாட்சி, ஸ்ரீநிவாசன் ஆகியோரின் பூட்டியுமாவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (20-5-77) வெள்ளிக்கிழமை உடுவில் அம்மன்கோவிலடியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.
6236

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மே மாதம் 20-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna; Telegram: Eelanaadu Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.